Registered as a Newspaper    பக்கங்கள் 6    விலை ரூபா 5-00

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

மலர் 05    திருவள்ளுவர் ஆண்டு 2025    பங்குனி 17    (30.3.94)    புதன்கிழமை    இதழ் 40

## பரீட்சைக்கு சென்ற மாணவர் ஏமாற்றத்துடன் திரும்பினர்

வடமராட்சியில் மூன்று கல்விக் கோட்டங்களில் உள்ள பரீட்சார்த்திகளுக்கு உரிய நேரத்தில் பரீட்சை வினாத்தாள்கள் கிடைக்காததினால் பரீட்சார்த்திகள் மாலை வரை தங்கியிருந்துவிட்டு ஏமாற்றமடைந்த நிலையில் திரும்பிச்சென்றனர். தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தினால் நேற்று முன்தினம் நடாத்தப்படவிருந்த ஆண்டு - 13 க்கான பொருளியல், ஆண்டு -12க்கான இந்து நாகரிகம், கிறிஸ்தவம், தூயகணிதம் ஆகிய உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பரீட்சை வினாத்தாள்களே பரீட்சை நிலையத்திற்கு வந்து சேராததினால் பரீட்சார்த்திகளும், மேற்பார்வை உத்தியோகத்தர்களும் திரும்பிச் செல்ல நேரிட்டது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## 58 தமிழர் 18 முஸ்லிம்கள் மன்னாரில் காணவில்லை

(கொழும்பு)

மன்னாரில் இராணுவ கட்டுப் பாட்டுப் பகுதியில் இருந்து ஐம்பத்தெட்டு தமிழர்களும் பதினெட்டு முஸ்லிம்களும் இதுவரை காணாமல் போயுள்ளதாக தெரியவருகின்றது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இருந்து காணாமல் போயுள்ள இவர்கள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டனரா அல்லது ஏதாவது முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா என்பது தெரியவரவில்லை. இவ்வாறு கைதானவர்கள் பற்றிய நிலையை அறிய முடியாது பெற்றோர் அங்கலாய்த்த வண்ணமுள்ளனர்.

## ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா மேயில் சீனா செல்லத் திட்டம்

### ராணுவ உதவி குறித்து முக்கிய பேச்சு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா மே ஐந்தாம் திகதி சீனாவிற்கு பயணம் மேற்கொள்ள உள்ளார் சீன உதவிப் பிரதமர் சிறிலங்காவிற்கு வந்திருந்தவேளை வெளிநாட்டமைச்சுடன் நடாத்திய பேச்சுக்களை அடுத்தே ஜனாதிபதியை சீனாவிற்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 'எயிட்ஸ்' நோய் பரவின் ராணுவத்தை அழித்துவிடும்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தினரிடையே 'எயிட்ஸ்' நோய் பரவினால் அது முழு இராணுவத்தினரையுமே அழித்துவிடும் என வடமேல் மாகாண இராணுவ வைத்திய அதிகாரி எச்சரித்துள்ளார்.

உடலிலே குண்டைப்பொருத்தி ராஜீவ் காந்தியைக் கொன்ற தற்கொலைப் படையாளியால் ஏற்பட்ட அழிவைவிட மிகமோசமான அழிவை இராணுவத்தினருள் 'எயிட்ஸ்' நோயாளியிருப்பதால் ஏற்படுத்தும். எனவே தாமதமின்றி அனைத்து இராணுவத்தினரையும் 'எயிட்ஸ். பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# ரஷ்யா - தென்னாபிரிக்கா நாடுகளிடம் 300 கோடி ரூபா புதிய ஆயுத கொள்வனவு

## அதிகாரிகள் மிகவிரைவில் பயணம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு யுத்த தேவைக்கென மேலும் 300 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டு மிக விரைவில் உயர் அதிகாரிகள் குழுவொன்று ரஷ்யாவிற்கும், தென்னாபிரிக்காவிற்கும் விஜயம் செய்யவுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. இவ் ஆயுதக் கொள்வனவு தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும் மேலும் அறியவருகின்றது.

இது குறித்து தகவல் வெளியிட்டுள்ள தினயின பத்திரிகை இவ் ஆயுதக்கொள்வனவு பிரபல ஆயுத வர்த்தகர்கள் இருவர் மூலம் நடைபெற ஏற்பாடாகியிருப்பதாகவும் தெரிவித்துள்ளது: மேலும் ரஷ்ய ஆயுதக் கொள்வனவு தொடர்பாக சிறிலங்கா பிரதிநிதிகள் மூவரும் ரஷ்யாவின் தரப்பாக எலக்ரோனிக் நிறுவன உரிமையாளர்ஒருவர் மட்டும் செயற்படுவதாக தெரியவந்துள்ளது.

ஆயுதக் கொள்வனவு முழுமையாக இரு அரசுகளுக்கு இடையில்நடைபெற வேண்டுமென பாதுகாப்பு உயர் அதிகாரிகள் அரசாங்கத்தை வற்புறுத்திவந்துள்ளபோதும்

## சுற்றிவளைக்கவந்தஇராணுவத்துடன் தண்ணிமுறிப்பில் புலிகள் மோதல்

### ஆறு போராளிகள் வீரச்சாவு

(முல்லைத்தீவு)

நேற்று முன்தினம் காலை ஆறு மணியளவில் முல்லை மாவட்டம் தண்ணி முறிப்பு எனும் இடத்தில் விடுதலைப் புலிகளை சுற்றி வளைக்கும் நோக்குடன் வந்த இராணுவத்தினருக்கும்விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றது.

இம் மோதலில் விடுதலைப்

...வரவில்லை:

இம் மோதலில் வீரச்சாவு அடைந்த

ஃ கப்டன் கட்டப்பொம்மன் (நீலக்குமார் ராஜ்குமார் சுழிபுரம் மேற்கு யாழ்ப்பாணம்)

ஃ 2ம் லெப். அரிமா அரசு (இராசலிங்கம் அசோக்குமார் விளக்குவைத்தகுளம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று மாவீரர்களின் வீரச்சாவு நிகழ்வுகள்

பல ஆயுத வார்த்தைகள் இரு வர் மூலம் நடைபெற ஏற்

தொடர்பாக சிறிலங்கா பிரதிநிதிகள் மூவரும் ரஷ்யா

தெரியவந்துள்ளது.

ஆயுதக் கொள்வனவு முழு

# சீனாவிடம் போர்க்கப்பல் கொள்வனவு; திட்டம் கைவிடப்படவில்லை

(கொழும்பு)

சீனாவிடமிருந்து போர்க் கப்பல்களை வாங்கும் திட்டத்தை அரசு கைவிட்டுள்ளதாக வெளியான செய்திகளை பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது. போர்க்கப்பல்களை கொள்வனவுசெய்வது தொடர்பாக தொடர்ந்தும் பேச்சுக்கள் நடப்பதாக அமைச்சு மேலும் தெரிவித்தது.

கொள்வனவு குறித்த பேச்சுகள் நடத்துவதற்காக பீக்கிங் சென்றுள்ள கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மோகான் சமரசேகர தலைமையிலான குழுவினர் எதிர் வரும் 10ஆம் திகதி யளவில் நாடு திரும்புவர். அவர்களை உடனடியாக திரும்புமாறு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டதாக வெளியான செய்திகள் முற்றிலும் தவறானவை என பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நிதி பற்றாக்குறையினால் சீனாவிடமிருந்து போர்க்கப் பல்களை கொள்வனவு செய்யும் திட்டத்தை சிறிலங்கா அரசு கைவிட்டுள்ளதாகவும், இதனால் இது தொடர்பாக பேச்சு நடத்த சீனா சென்றுள்ள கடற்படைத் தளபதி ஆத்திரம் அடைந்துள்ளதாகவும் இது குறித்து ஜனாதிபதி

(6 ஆம் பக்கம்பார்க்க)

# மாணவர் மனப்பாங்கு அறிந்து உயர் கல்வி வசதியை வழங்குக

## அரசிற்குப் புத்திஜீவிகள் ஆலோசனை

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் அனுமதி வழங்கப்படும் மாணவர்கள் ''விசேடமனப்பாங்கைச் சோதிக்கும் பரீட்சை'' ஒன்றுக்குதோற்றவேண்டும்என்ற ஆலோசனையை தென்பகுதியின் புத்திஜீவிகள் அரசாங்கத்திடம்சமர்ப்பித்துள்ளனர்.

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி வழங்குவதற்குத் தகுதியானவர்களது விருப்பு, ரசனை ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து உயர் கல்வி வசதியை மாணவர்களுக்கு வழங்குவதற்கு இந்த விசேட பரீட்சை உதவி புரியும் என்றும் இதன் மூலம் உயர் கல்வியில் மாணவர்கள் புலமைத்துவம் பெற சந்தர்ப்பம் உருவாக்கப்படும் என்றும் புத்திஜீவிகள்பலர் அரசாங்கத்திடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தேசிய கல்வி ஆணைக்குழு மேற்படி பரீட்சையை நடாத்துவது குறித்து தற்பொழுது தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் இது குறித்து பல்வேறு மட்டங்களில் ஆலோசனையைப் பெறும் முயற்சியில் தேசியக் கல்வி ஆணைக்குழு இறங்கியிருப்பதாகவும் கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க. நி)

# அநுரா பண்டாரநாயக்கா அரசியலில் இருந்து ஒதுங்கலாம்

(கொழும்பு)

தென்மாகாண சபைத்தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த படுதோல்வியை தொடர்ந்து கட்சி சார்பில் தீவிர பிரசாரத்திற்கு பொறுப்பாகவிருந்த அநுரா பண்டாரநாயகா அரசியலில் இருந்து விரைவில் ஒதுங்கலாம் என அரசியல் அவதானிகள் ஆரூடம் தெரிவித்துள்ளனர்.

நடந்து முடிந்த தென் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த பெரும் தோல்வியில் அநுரா பண்டார நாயக்காவுக்கு நேரடிப் பங்களிப்பு உண்டு என சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் வெளிப்படையா

(6 ஆம் பக்கம் பார்க்க)

வற்புறுத்தி வந்துள்ளபோதும் தென்ஆபிரிக்காவுடன் சிறிலங்காவிற்கு தூதுவராலய தொடர்புகள் இன்மையினால் இந்தநிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

இம் மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஆறு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர். இராணுவத்தினர் பலத்த சேதத்துடன் பின்வாங்கிச் சென்றனர். இராணுவதரப்பு சேதவிபரம் தெரிய

## வீரச்சாவு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த 28-ம் திகதி முல்லை மாவட்டம் தண்ணி முறிப்பு பகுதியில் நடைபெற்ற மோதலில் வீரச்சாவு அடைந்த ஆறு வீரவேங்கைகளில் கப்டன் கட்டபொம்மன், 2ஆம் லெப். இளந்திரையன், 2ஆம் லெப். சூரன் ஆகிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.க. விற்குள் தீவிர முரண்பாடு; டி.பி.யை வெளியேற்ற சிலர் முயற்சி

## தென்மாகாணசபை தேர்தலின் எதிரொலி

தென்மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்த பெரும் தோல்வியைத் தொடர்ந்து அக்கட்சிக்குள் பலத்த கருத்து முரண்பாடுகள் தோன்றியுள்ளதாகவும் டி. பி. விஜேதுங்காவை வெளியேற்றி விட்டு ரணில் விக்கிரமசிங்காவை ஜனாதிபதி வேட்பாளராக்கும் முயற்சியில் சில சிரேஷ்ட அமைச்சர்கள் தீவிரம் காட்டி வருவதாகவும் கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் கடும் போக்கே தென்மாகாணசபைத் தேர்தலில் கட்சி படுதோல்வியடைவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்திருந்ததாகவும் அவர் தொடர்ந்தும் இதனைக் கடைப்பிடிப்பாரேயானால் கட்சியின் வளர்ச்சி எதிர்காலத்தில் மேலும் பாதிப்படையும் எனவும் சிலசிரேஷ்ட அமைச்சர்கள் சுட்டிக்காட்டி வருகின்றனர். இதன் அடிப்படையிலேயே இவர்கள் ஜனாதிபதியை வெளியேற்றும் முயற்சியில் தீவிரம் காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தனக்கு எதிராகக் கட்சிக்குள் இருந்து செயற்படுபவர்களை வெளியேற்றும் முகமாக சில ஆரம்ப நடவடிக்கைகளில் டி. பி. விஜேதுங்கா ஈடுபட்டுள்ளார். இதன் முதல் கட்ட நடவடிக்கையாக கட்சிப் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சிறிசேன குரேக்கு எதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்றும் நாளையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் எனவும் இச் சேவை தவிர்க்க முடியாத காரணத்தினால் நேற்று நடைபெறவில்லை எனவும் விடுதலைப் புலிகள் அரசியல் துறை அறிவித்துள்ளது.

# குண்டர்களை ஏற்றி வந்த அமைச்சர் வாகனம் மீது மக்கள் தாக்குதல்

(கொழும்பு)

தென்மாகாண சபைத்தேர்தலின் போது மக்கள் மீது தாக்குதல் நடாத்தி வன்முறையில் ஈடுபட குண்டர் படையை ஏற்றி சென்ற அமைச்சரின் வாகனம் மீது மக்கள் திரண்டு தாக்குதல் நடாத்தினர். இதனால் அமைச்சரின் வாகனம் பலத்த சேதமடைந்தது.

மேற்படி தனது வாகனத்தில் குண்டர் படையை ஏற்றிச் சென்றவர் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா எனவும் இவரது வாகனமே மக்களால் அடித்து நொருக்கப்பட்டதாகவும் இதன்போது அமைச்சர் வாகனத்தை கைவிட்டு தப்பி ஓடியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 'மாகோ' வில் அகதிகள் நாளை யாழ். வருவர்

யாழ். குடாநாட்டைச் சேர்ந்த இரண்டாம் கட்ட அகதிகள் நாளை 'மாகோ' கப்பலில்பருத்தித்துறை துறைமுகம் வருகின்றனர்.

வவுனியாவில் தங்கியிருக்கும் அகதிகளில் 80 குடும்பங்கள் திருகோணமலையிலிருந்து மேற்குறித்த கப்பல்மூலம் வரவுள்ளனர். இவர்கள் அனைவரும் காலை 6.00 மணிக்கு பருத்தித்துறைக்கு வந்துசேருவர்என எதிர்பார்க்கப்படுகின்றது. (யோ)

## ஐ.தே.க. குண்டர்கள் தாக்கி பொதுமக்கள் பலர் காயம்

ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ளபோது தென்மாகாண சபை பகுதியில் வாகனங்களில் வந்தோர் மேற்கொண்ட தாக்குதலுக்கு பொது மக்கள் பலர் படு காயமடைந்துள்ளனர்.

மேற்படி தாக்குதலுக்கு இலக்கானவர்கள் காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### புரோயிலர் குஞ்சு விற்பனை

பிறிமா புரோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு ஓடர் கொடுத்தவர்கள் உடன் வந்து பெற்றுக் கொள்ளவும்: 'மல்லிகாபதி', சந்தை ஒழுங்கு ஒழுங்கை, மானிப்பாய். (7840)

### ஆங்கில மருத்துவம்

சகலவிதமான நோய்களுக்கும் அனுபவம் வாய்ந்த மருத்துவர்களினால் தினசரி காலை மாலை சிகிச்சை அளிக்கப்படுகின்றது. பகவான் ஆங்கில மருத்துவ அகம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-8879)

### காணி விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு இராச வீதி வெலிங்டன் தோட்டத்திற்கு அருகில் பெரப்புக் காணி பிரதான வீதியில் விற்பனைக்குண்டு. தொடர்பு: மா: வைகுந்தவாசன், பழைய வீதி, கோப்பாய் தெற்கு கோப்பாய். (7817)

### இரும்புத்தகடு

8 × 4 சதுரஅடி $\frac{1}{4}$ அங்; $1\frac{1}{2}$ நூல் கனமான இரும்புத்தகடுகள் விற்பனைக்கு உள்ளன. "மில்க்வைற்" (சி-8946)

### தவறி விட்டது

12-03-1994 அன்று யாழ்ப்பாணத்திற்கும் நாவற்குழிக்குமிடையில் (இராசையா இவராசா) 682151889V அடையாள அட்டையும், பேர்சும் முக்கிய ஆவணங்களும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (7881)

### விற்பனைக்கு

$1\frac{1}{2}$ மாத கைலைன் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு: ஒரு குஞ்சு நூற்றி முப்பத்தைந்து ரூபா (135/-) மட்டுமே. தொடர்புக்கு; கோழிப்பண்ணை, பலாலிவீதி திருநெல்வேலி (சி-8953)

### நிர்வாகிகள் தெரிவு

(வடமராட்சி)

கரவெட்டி தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலைய வருடாந்த நிர்வாகிகள் தெரிவு ஒன்று நிலையத்தில் நடைபெற்றது.

## ஆண்டு ஒன்றின் நினைவலைகள்

திதி 31-03-1994



மண்ணில்: 22 05 1922

விண்ணில்: 11 04 1993

### அமரர் சி. க. வேலாயுதபிள்ளை

(ஸ்தாபகர் அகில இலங்கை காந்தி சேவா சங்கம் முன்னாள் மாவட்ட இணைப்பாளர் சர்வோதயம் கிளிநொச்சி.)

ஈராறு திங்கள் இங்கு
நீங்கள் இல்லை யென
ஓலமிட்டு அழுகின்றோம் - உங்கள்
காதில் விழவில்லையோ
விதியோ வருத்தமோ என
விளங்காமல் துடிக்கின்றோம்.

கரந்தன், நீர்வேலி. (7880)

உங்கள் பிரிவால் துயருறும், சகோதரி, மைத்துனர், மருமக்கள்

## நாடக வரலாறு பற்றி கல்வியியற் கருத்தரங்கு

தமிழ்நாட்டின் நாடக வரலாறு தொடர்பான கல்வியியற் கருத்தரங்கு ஒன்றை குரும்பசிட்டி சன்மார்க்க சபை நாளை மறுதினம் வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் நடத்தவுள்ளது நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ள நாடகமும் அரங்கியலும் பற்றிய இக் கருத்தரங்கிற்கு கலைப்பேராசிரியர் பொன்னுத்துரை தலைமை தாங்கவுள்ளார் இக்கருத்தரங்குகளில் தமிழ்நாடக அரங்கை நோக்குகையிலுள்ள பிரச்சினைகள் பற்றி திரு குழந்தை ம. சண்முகலிங்கமும், அரங்கப் பண்புடைய கரணங்கள் பற்றி செல்வி இ. ஜெயரஞ்சனியும், கவித் தொகைகாட்டும் தமிழ் நாடகம் பற்றி திரு கி. ஜெயசங்கரும், செவ்வியல் அரங்கு பற்றி செல்வி ந. நவதர்ஷினியும், கோவில் அரங்கு பற்றி திரு க. திலகநாதனும், கதை கூறும் அரங்கு பற்றி திரு பா. அகிலனும், உரைப் பாரம்பரியம் வழிவரும் நாடகச் செய்திகள் பற்றி திரு சி. சிவலிங்கராசாவும், சுற்றாடல் அரங்கு பற்றி திரு பா. அகிலனும், பாடல் அரங்கு பற்றி செல்வி ந. நவதர்ஷினியும், சொல்லாடல் அரங்கு பற்றி செல்வி மகாலட்சுமியும், தமிழகத்தின் அரசியல் அரங்கும் நாடக சபாக்களும் பற்றி திரு கி. ஜெயசங்கரும் உரையாற்றுவர்.

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கம் சங்க எல்லைக்குள் இரவு பாதுகாப்புச் சேவை நடாத்துவதற்கு ஆட்களை சேர்ப்பதற்குவர்த்தக சங்க எல்லைக்குள் வதியும் ஆண்பாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோருகின்றது மேலதிக விபரங்களை சங்க காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும். 1994-04-05ம் திகதி வரைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

கைத்தொழில் வர்த்தகர் சங்கம்
தலங்கிளப்பு வீதி
சாவகச்சேரி

(சி-8951)


- அமெரிக்கா, ஜேர்மன், அவுஸ்ரேலியா, ஜப்பான், பர்மா, சீனா, தென் ஆபிரிக்கா, இஸ்ரேல் ஆகிய உலக நாடுகளிற்கு உல்லாசப் பயணம் செய்ய விரும்புகிறீர்களா...?
- இதற்கு இலட்சக்கணக்கான பணமும், நேரமும், காலமும் செலவாகும் எனக் கவலைப்படுகிறீர்களா...?
- கவலையை விடுங்கள்!! நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ரூபா 100 கொடுத்து உலக உலாவை வாங்கிப் படிப்பதுதான்!!
- உலக நாடுகள் அனைத்தையும் உலா வந்த இனிய அனுபவம் உங்களிற்கு கிடைக்கும்!!

இதோ! வந்து விட்டது!!

மார்ச் மாத உலக உலா!!!

உங்கள் இரசனைக்கேற்ற பல சுவையான அம்சங்களை உள்ளடக்கி


றோயல் கிறவுண் நிறுவனத்தின்

## அப்பியாசக் கொப்பிகளை பாவனையிலிருந்து நீக்குக

ம. கி. அ சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் எழுத்துக்களை பழகும் மாணவர்கள் பயன்படுத்தும் றோயல் கிறவுண் அப்பியாசப் புத்தகங்களின் எழுத்துக்கள் உறுப்பு எழுத்துக்களாக இல்லாமல் இருப்பதாக மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது இது தொடர்பாக மாவட்ட கல்விப்பணிப்பாளருக்கு இச் சங்கம் எழுதியுள்ள கடிதமொன்றில் கொழும்பிலே அச்சடிக்கப்பட்ட இப் புத்தகங்கள் மாணவர்கள் மீது திணிக்கப்படுவதாகவும், இது விடயத்தில் கல்விப் பகுதியினரோ வடக்கு. கிழக்கு மாகாண கல்வி அமைச்சோ, பிரந்தியகல்விப்பணிப்பாளர்களோ நடவடிக்கை எடுக்காமலிருப்பது பெரும் மனவருத்தம் தருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது: முதலாவது புத்தகத்தில் கி.கி.தி போன்ற எழுத்துக்களின் விசிறிகள் பிழையாக அச்சிடப்பட்டிருப்பதாகவும், இரண்டாவது புத்தகத்தில் ரு. ழு. ரூ. டு. சீ, போன்ற எழுத்துக்கள் தவறாக அச்சிடப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ள இச் சங்கச் செயலாளர் தமது அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் இதனை தமிழ்மொழியை அழிக்கும் திட்டமாகக் கருதவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே தமிழ் தமிழாகவாழ்வதற்காக இவ் அப்பியாசக் கொப்பிகளை பாவனையிலிருந்து நீக்கவேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் மாணவர்களைக் கொண்டு இவற்றை எரிக்க நேரும் எனவும் சங்கச் செயலாளர் சிறீபாஸ்கரன் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

## நினைவு கூருகின்றோம்...

## 1994-03-30

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை-கும்புறுப்பிட்டிக் காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முற்றுகையிலிருந்து தப்புவதற்காக குளத்தில் பாய்ந்தபோது முதலை கடித்ததால் வீரமரணமடைந்த-

**ராஜன்** (பொன்னுத்துரை நடேசலிங்கம் - கும்புறுப்பிட்டி - திருமலை)

கிளி - பரந்தன், முரசுமோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**2ம் லெப். நிஷால்** (பெர்னாண்டோ றோமன் சுரேஸ்குமார் - திருநகர் - கிளிநொச்சி)

1987ஆம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் பயணம் செய்து கொண்டிருந்தபோது வீரச்சாவெய்திய-

**ஜெகன்** (அன்ரனி எலியான் குரூஸ் - பரப்பாங்கண்டல் - மன்னார்)

**சங்கர்** (முனியாண்டி காமராஜ் - கரிசல்-மன்னார்)

1989ஆம் ஆண்டு திருக்கோணமடுவில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**மணிவண்ணன்** (கதிர்காமத்தம்பி ஜெயசீலன்-கண்ணகிகிராமம், வாழைச்சேனை - மட்டு)

1991ஆம் ஆண்டு யாழ் - கீரிமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் குறிவைத்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**மிராண்டா** (பூலோகசிங்கம் உதயன் - மருத்துவமனை வீதி - மன்னார்)

மன்னார் - வேப்பங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். ஜான்** (செபமாலை ஸ்ரான்லி- சிலாவத்தை - முல்லைத்தீவு)

**விஜி** (வேலுப்பிள்ளை பரமேஸ்வரன் - கற்சிலைமடு,

வள்ளுவர் சனசமூக நிலைய வருடாந்த நிர்வாகிகள் தெரிவு ஒன்று நிலையத்தில் நடைபெற்றது.

தலைவர் திரு. ஆ. வன்னியசிங்கம், உபதலைவர் திரு க. வல்லிபுரம், செயலாளர் திரு. இ. கந்தசாமி, உபசெயலாளர் திரு. வ. மகாதேவன், பொருளாளர் திரு. சி. ரவீந்திரன் இவர்களுடன் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

(யோ)

## மலசல கூடங்கள் அமைப்பு


இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து கோப்பாய், உடுவில் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள மணிமொழி, புத்தூர் நாடு, செல்லமுத்து, ஹென்றி டொனால், கட்டுடை, றோய் குருவளை பெருமாள்கடவை மாவீரர் ஆகிய முகாம்களில் வாழும் மக்களின் நன்மை கருதிஅம்முகாம்களில் மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒருமுகாமுக்கு ஏழு மலசல கூடங்கள் எனும் அடிப்படையில் ஜேர்மன் உதவித்திட்டத்தின் கீழ் தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உட்கட்டுமானப் பகுதியினரின் தேச நிர்மாணிகளினால் இவை நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இச் செயற்பாட்டினால் இதுவரைகாலமும் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் காணப்பட்டு வந்த கழிப்பிடங்கள் இல்லாமைப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காணப்பட்டுள்ளது. அத்துடன் அங்கு காணப்பட்டு வந்த சுகாதாரச் சீர்கேட்டுப் பிரச்சினைகள் குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

**உங்கள் இரசனைக்கேற்ற பல சுவையான அம்சங்களை உள்ளடக்கி இம்மாத உலக உலா வெளிவந்துள்ளது**

- ஆசியா
- ஐரோப்பா
- அமெரிக்கா
- ஆபிரிக்கா
- வாணிகம்
- விண்வெளி
- குற்றவியல்



- மனிதவியல் வரலாறு
- விளையாட்டு
- சமுகவியல்
- கடலடி ஆய்வு
- மருத்துவம்
- முகாமைத்துவம்
- பல்திணைப்பகுதி

**எனப் பல புதிய விடயங்களைத் தன்னகத்தே கொண்டு சிறப்புற அச்சிடப்பட்டு உலக உலா வெளியிடப்பட்டுள்ளது**

(தமிழீழத்தில்!)

சிறுவர் முதல் முதியோர் வரை பலதரப்பினரும் படித்துப் பயன் பெறவென பிரத்தியேகமாக அச்சிட்டு வெளியிடப்படுவது உலக உலா மட்டுமே!!

**உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்**

(வி-8949)

---

வீரச்சாவெய்திய-

லெப். ஜான் (செபமாலை ஸ்ரான்லி- சிலாவத்தை - முல்லைத்தீவு)

விஜி (வேலுப்பிள்ளை பரமேஸ்வரன் - கற்சிலைமடு, ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

குஞ்சன் (இராமலிங்கம் கமலேஸ்வரன்-சிலாவத்தை - முல்லைத்தீவு)

துசான் (இசுதோர் வாசிங்டன் மோகனராசா- 50-ம்படிவம், புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவு)

ரவி (சுப்பிரமணியம் ஜெயநேசன் - 3-ம்வட்டாரம், முள்ளியவளை - முல்லைத்தீவு)

நிதி (வே.பரமேஸ்வரன் - கற்சிலைமடு-முல்லைத்தீவு)

கண்ணன் (மாசிலாமணி ராஜேஸ்வரன் - கொக்குத்தொடுவாய் - மணலாறு)

புனிதன் (பிரசேன விஜயன்- குருக்களூர்-வவுனியா)

மைமன் (மிக்கேல் திவ்வியநாதன் - நடுக்குடா, பேசாலை - மன்னார்)

மொஸ்கோ (சந்திரன் பதமநாதன் - முருங்கன்- மன்னார்)

லெப். அருண் (கருப்பையா நித்தியானந்த ஈஸ்வரன்- திருவையாறு - கிளிநொச்சி)

லெப். யேசு (செபஸ்தியான் யோசப் அன்ரனி - உப்பளம்- ஆனையிறவு)

பைரவி (நாகேந்திரன் சதீஸ்குமார் - நெடுந்தீவு)

1993ஆம்ஆண்டுமட்டு மாவட்டத்தில் பாம்பு கடித்ததில் எமைப் பிரிந்த-

கப்டன் ரதீஸ்வரன்-ரதீஸ் (கோபாலபிள்ளை செல்வராஜா - கடற்கரைவீதி - அம்பாறை)

வவுனியா - செட்டிக்குளம் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய-

கப்டன் உருத்திரன் - மொறகோ (விஜயரத்தினம் தயாளன் - 171, வைத்தபுரம் கிளிநொச்சி)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

இக்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(வி-8933)

---

**வீட்டினைச்சுற்றி தோட்டம் தழைக்க நாட்டினில் எங்கும் பசுமையே செழிக்கும்**

நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்


## மரு. பீட மாணவர் அனுமதி 25 வீதத்தால் குறைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் கல்வியாண்டின்போது பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் தொகையை இருபத்திஐந்து வீதத்தினால் குறைப்பதற்கு உயர் கல்வி அமைச்சு உத்தேசித்து இருப்பதாக அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறு மருத்துவபீட மாணவர்களின் குறைப்புக்கு காரணம் றுகுணு, கொழும்பு பல்கலைக்கழகங்களின் மருத்துவபீட பீடாதிபதிகள் தமக்கு கூடிய அளவு மாணவர்களின் அனுமதியினால் ஏற்பட்ட பாதிப்புக்களையும் ஏற்பட்ட சிரமங்களையும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு சுட்டிக் காட்டியதைத்தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக உயர்கல்வி அமைச்சு வட்டாரம் தெரிவித்துள்ளதாக தெரியவருகின்றது.

## 4-ம் ஆண்டு நினைவு நாள்



செல்வி பத்மநாதன் சசிகலா

மலர்வு: 09 06 - 1969 உதிர்வு: 14 - 03 - 1990

திதி: 30 - 03 - 1994

ஆண்டுகள் நான்கு ஆனது இன்று
ஆறாமல் எம்மனம் பதறுது என்றும்
நினைவுகள் எம்மை தொடருது இங்கு - உன்
பிரிவு எம்மை வதைக்குது என்றும்

## மாணவர்களிடம் சமயபண்பு மேலும் வளர்க்க வேண்டும்

**- பிரதிக் கல்விப் பணிப்பாளர்**

(வடமராட்சி)

பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் சமயப் பண்புகளை நிறையவளர்க்க வேண்டும் சமயப் பண்புகள் மாணவர்களை நல்வாழ்வுக்கு இட்டுச் செல்லும்.

இவ்வாறு இலங்கை சைவ மன்றம் அல்வாய்க் கிளையினால் அல்வாய் (மண்ணை) மாதாங்கோயிலடியில் மன்றத் தலைவர் திரு. மு மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு பாராட்டுரை வழங்கிய பருத்தித்துறை கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரட்ணம் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடும்போது, மாணவர்கள் நல்ல பிரஜைகளாக எதிர்காலத்தில் தோன்றுவதற்குச் சமயப் பண்புகள் அவசியம். சமயப் பண்புகளைக் கற்பதனால் மாணவர்கள் தீயவழிகளில் இருந்து விடுபட்டு நல்ல பாதைகளில் செல்வர்.

இப்படியான - இங்கு நடைபெற்ற பேச்சு, பண்ணிசை, சகலகலாவல்லிமாலை போன்ற சமய நிகழ்வுகள் பாடசாலைகள் மட்டத்திலும் அமைய வேண்டும்.

மகாத்மா காந்தி ஒரு பெரியார். அவர் சமயப் பண்புகள் நிறைந்தவர். அவர் சமயப் பண்புகளைத் தழுவிக் கொண்டமையினால் உலகளாவிய ரீதியில் மதிப்பு பெற்றார். இன்றைய காலகட்டத்தில் சமயப் பண்புகளை மாணவர்கள் பின்பற்றவேண்டும் என்றார்.

அடுத்து சித்தாந்த பண்டிதர் சைவப்புலவர் திரு.சி. வேலாயுதம் அவர்கள் 'சமயமும் நாமும்' என்னும் பொருளில் சிறப்புரை நிகழ்த்தினார். பண்ணிசை, பேச்சு, சகலகலாவல்லிமாலை போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்ற மாணவர்களுக்குப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரட்ணம் சான்றிதழ்களை வழங்கினார். அதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

மற்றும் இந்நிகழ்வு ஆரம்பமாவதற்கு முன்னர் சிவத்திரு ந சிவநேசக் குருக்கள் ஆசியுரை வழங்கினார். வரவேற்புரையை தம்பசிட்டி மெ. மி த. க. பாடசாலை அதிபர் திரு. சந்திரசேகரம் நிகழ்த்தினார். இறுதியில் நன்றியுரையை இளைப்பாறிய ஆசிரியர் திரு. க. கணபதிப்பிள்ளை நிகழ்த்தினார்.

(யோ)

### கிராமிய நிதியம் அங்குரார்ப்பணம்

வறிய விவசாயிகளுக்குக் கடனுதவி வழங்கி உறபத்திகளை ஊக்குவித்து பொருண்மியத்தை மேம்படுத்தும் நோக்குடன் வன்னி மாவட்டத்தில் விசுவமடு வட்டத்திலுள்ள சுதந்திரபுரம் கிராமத்தில் கிராமிய நிதியம் ஒன்று கடந்த மாத நடுப் பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிளிநொச்சி கோட்ட இணைப்பாளரினால் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இக்கிராமிய நிதியத்தின் மூலம் 150 வறிய விவசாயிகளுக்கு விவசாயம், சிறுதானிய உற்பத்திக்கெனப் பணம் கடனாக வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர்கள் நியமனம் வழங்குவதற்கு முடிவு

(யாழ்ப்பாணம்)

தமிழ்மொழி மூலமான ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கு கல்விச் சேவைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களை மேற்படி அமைச்சு கோரியுள்ளது.

இம்மாதம் 25ஆம் திகதி வர்த்தமானியில் இவ் ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது (அ)

### மீன்பிடி வலை விநியோகம்

கடன் அடிப்படையில் வலைகள் விநியோகிக்கும் திட்டத்தின் கீழ் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், வலைகள் விநியோகித்து வருகின்றது.

இத்திட்டம் கடலோர அபிவிருத்திப் பகுதியின் மாவீரர்

### காய்ச்சலினால்

## பதவி ஏற்க ஆளுநர் அழைப்பிற்கு தொடங்கொட காத்திருக்கிறார்

(கொழும்பு)

தென் மாகாணசபை முதல் அமைச்சராக தெரிவு செய்யப்பட்ட அமரசிறி தொடங்கொட பதவியேற்பதற்காக ஆளுநரின் அழைப்பை இவர் ஆவலுடன் எதிர்பார்த்து இருப்பதாகவும் "லங்கா தீப" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தனது முதல் அமைச்சர் பதவியை உத்தியோக பூர்வமாக ஏற்றபின்னரே தென் மாகாண சபை அமைச்சரவையை நியமிக்க இருப்பதாகவும், மக்கள் தம் மீதும் தனது கட்சி மீதும் கொண்டுள்ள நம்பிக்கை வீண்போகாதவாறு தனது ஆட்சி அமையும் என்றும் இதற்கு சகல தரப்பினரின் பூரண ஒத்துழைப்பு பெறுவதே தனது முக்கிய நோக்கம் எனவும் மேலும் தெரிவித்தார்.

### நின்ற நிலையில் கல்வி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரியில் இயங்கி வரும் புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம், சித்தி விநாயகர் மகாவித்தியாலயம் திருநாவுக்கரசு வித்தியாலயம், குறிகாட்டுவான் அ. த. க வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் போதிய இருக்கை வசதிகள் இல்லையென்றும் இதனால் சில மாணவர்கள் 'நின்ற நிலையிலேயே' கல்வி பயில்வதாகவும் இவ் வித்தியாலயங்களின் அதிபர்களின் அறிக்கைகள் கூறுகின்றன.

(22)

### ஈஸ்ட் தயாரிப்பு முயற்சி

பாண், கேக் போன்ற உணவுப் பண்டங்கள்தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஈஸ்ட் என்னும் பொருளைத் தயாரிப்பதற்கான ஆராய்ச்சியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் ஈடுபட்டுள்ளார்கள். இதுவரை காலமும் இறக்குமதி செய்யப்பட்ட ஈஸ்ட்டே பாவனையில் இருந்துவருகின்றது. உள்ளூர் மூலப் பொருட்களில் இருந்து ஈஸ்ட் தயாரிக்கப்படக்கூடிய சாத்தியக் கூறுகளை அவதானித்த த. பொ. மே நிறுவனத்தினர் அதற்கான பூர்வாங்க ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்கள்.

### கால்நடை சுகாதார சேவை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கால்நடை சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து கால்நடைகளுக்கான தடுப்பூசிபோடுதல், செயற்கைமுறைச் சினைப்படுத்தல், மாடுகளுக்கான கர்ப்பப் பரிசோதனை ஆகியவற்

### எயர்லங்கா ஊழியரைத்தேட பிரிட்டன் உதவிநாடப்பட்டது

(கொழும்பு)

லண்டனில் காணாமற் போயுள்ள எயர்லங்காவின் விமான சிப்பந்தி ஒருவரைத் தேடிக் கண்டுபிடிக்க உதவும்படி சிறிலங்கா அரசு பிரிட்டன் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது. கொழும்பிலிருந்து எயர் லங்கா விமானம் மூலம் லண்டன் சென்ற இவர் அங்கு காணாமற் போயிருப்பதையடுத்தே இக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

லண்டனிலுள்ள சிறிலங்கா தூதுவராலயமும், பிரிட்டன் அரசு அதிகாரிகளும் இவரைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். விமான நிறுவன அதிகாரிகள் இவர் அரசியல் அடைக்கலம் கோருவதற்காக தலைமறைவாகியிருக்கலாம் என்ற சாத்தியப்பாட்டையும் நிராகரிக்கவில்லை. இதற்கு முன்பாகவும் எயர்லங்கா ஊழியர்கள் பலர் ஐரோப்பிய நகரங்களில் தஞ்சம் கோரிய பல சம்பவங்கள் நிகழ்ந்து இருப்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## சொந்தமண்ணில் வாழ்வது தமிழீழ தமிழர் மட்டுமே

**- அரசண்ணா**

உலக நாடுகளில் வாழும் தமிழர்கள் தாங்கள் நிலை கொண்டிருக்கும் அந்த மண்ணை தமது சொந்த மண் என்று சொல்வதில் திறன் அற்றவர்கள். தமிழீழத்தில் வாழும் ஒவ்வொரு தமிழர்களும் தமது சொந்த மண்ணில் தான் வாழுகின்றனர்.

இவ்வாறு கரணவாய் மகா வித்தியாலயத்தில் அண்மையில் உடுப்பிட்டி வட்டப் பொறுப்பாளர் திரு. த. சேரமான் தலைமையில் நடைபெற்ற வீரவணக்கக் கூட்டத்தில் அரசியல் பயிற்சிப் பள்ளிப் பொறுப்பாளர் திரு. எஸ். அரசண்ணா தெரிவித்தார்.

திரு. அரசண்ணா அங்கு தொடர்ந்து தெரிவிக்கும் போது, உலக நாடுகளில் வாழுகின்ற கோடீஸ்வரனாகினும் சரி, தமிழ் அரசியல்வாதிகளானாலும் சரி அந்த மண்ணைத் தமது சொந்த மண் என்று சொல்லும் வாய்ப்பற்றவர்கள். தமிழீழம் எமது சொந்த மண் என்ற பெருமையை உருவாக்கியவர் தமிழீழத் தேசியத் தலைவரே.

சிங்களப்பேரினவாதம்தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடியவர்கள் தான் இந்த மாவீரர்கள். 1983இல் எதிரிக்கு பலத்த அடி கொடுத்தது. எதிரியை கூண்டோடு அனுப்பியது எமது போராட்டம்.

எங்களிடம் அழகான மொழி இருக்கிறது நல்ல கலை பண்பாடு இருக்கிறது. தேசியப் பாடல், தேசிய உணர்வுகள் தேசிய வீரர்கள் இருக்கின்றனர் இதனை நாம் எமது போராட்டத்தின் மூலம் இந்த சிங்கள பேரினவாத அரசுக்கு ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் புரிய வைத்திருக்கிறோம் உலக அரங்கிலே நேசிக்கும் வியந்து பார்க்கும் இனமாகவும் உள்ளோம்; தமிழீழ மக்கள் பல்வேறு கலைகளில் வளர்ந்திருக்கிறோம். தமிழர்களின் விடுதலையும், சுதந்திர வாழ்வுக்காகவும் போராடுவோம்.

தமிழீழம் எமது சொந்த மண் இதை நாம் தைரியமாகச் சொல்லலாம். அதனை உருவாக்கியவர் எமது தேசியத் தலைவர் வருகின்ற எதிரிக்கு அடிபோட நாங்கள் தயாராக வேண்டும் அதற்கு நீங்களும் தயாராக வேண்டும் அவ்வாறு சால் எதிரி இங்கே கால் ஊன்ற முடியாது என்றார்.

தொடர்ந்து யாழ். மாவட்ட மாவீரர்கள் பணிமனை

ஆறாமல் எம்மனம் பதறுது என்றும்
நினைவுகள் எம்மை தொடருது இங்கு - உன்
பிரிவு எம்மை வதைக்குது எங்கும்

பாசத்திற் கிலக்கணம் நீகற்றுத் தந்தாய்
பண்புக்கு நீஒரு வடிவமைத்து நின்றாய்
தாங்காமல் நாம்இங்கு தவிக்கின்றோம் இன்று-இத்
தரணியில் எமக்கினி ஆறுதல் என்று?

வந்தவர் ஒருநாள் மீள்வது உறுதி
பிறந்தவர் இளமையில் துயில்வது அநீதி
ஆண்டவன் செயல்களில் இதுஒரு விதி - என்றும்
உன் நினைவு எமக்கெல்லாம் அழியாத நிதி

உன் பிரிவை நினைந்துருகும்

பெரிய பளை,
பளை. (7857) குடும்பத்தினர்

இத்திட்டம் கடல்வள அபிவிருத்திப் பகுதியின் மாவீரர் வார வலை விநியோகத் திட்டத்தின் தொடராக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இம்மாதத்தில் மணற்காடு, கட்டைக்காடு ஆகிய கடற்றொழில் சங்கங்களைச் சேர்ந்த 18 பயனாளிகளுக்கு வலை வழங்கப்பட்டுள்ளது.

ஒருவருக்கு 5000 ரூபா பெறுமதியான வலைகள் விநியோகிக்கப்பட்டன. 18 பயனாளிகளுக்கும் 90,000 (தொண்ணூறு ஆயிரம்) ரூபா பெறுமதியான வலைகள் கடற்புலிகள் மாவட்டம் ஊடாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## காய்ச்சலினால் மரணம்

காய்ச்சல் ஏற்பட்டதால் இளம்பெண் ஒருவர் மரணமானார். கல்வயல், சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த இவர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாரென்றும் அங்கு பின்னர் மரணமானாரெனவும் கூறப்படுகின்றது. தென்மராட்சிப் பகுதியில் மலேரியா மற்றும் மூளை மலேரியா போன்ற நோய்களால் பலரும் பாதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

...பப் பரிசோதனை ஆகியவற்றைச் செய்து வருகின்றது

கடந்த தைமாதத்தில் மட்டும் யாழ் மாவட்டத்தில் 58,387 கோழிகளுக்கு கொள்ளை நோய் தடுப்பூசியும், 440 கோழிகளுக்கு அம்மைப்பால் தடுப்பூசியும் 673 பசுக்களுக்கு செயற்கை முறைச் சினைப்படுத்தல் சேவையும், 31 பசுக்களுக்கு கர்ப்பப் பரிசோதனையும் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## குளம் புனரமைப்பு

முல்லை மாவட்டத்திலுள்ள ஆனந்தபுரம் குளம் தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக் குழுப்பகுதியினரால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

ஒன்றரை லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட இப்புனரமைப்புப் பணியில் அப்பகுதி கிராமிய உற்பத்திக் குழுவினருடன் இப்பகுதி மக்களும் இணைந்து சிரமதான அடிப்படையில் இப்பணியினை செய்து முடித்தனர். இப்பணியின் போது 80,000 ரூபா பணமாகச் செலவிடப்பட்டதுடன் 70,000 ரூபா பெறுமதியான மனித வலுவும் ஈடுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கிராமிய உற்பத்திக் குழுக்கள் அமைப்பு

முல்லை மாவட்டத்தின் கடல் புலிகள் பிரதேசங்களான அம்பலவன் பொக்கணை, வலயன்மடம், முள்ளிவாய்க்கால் அடங்கலான பகுதிகளில் முல்லை மாவட்டத்தின் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக்குழு பகுதியினரால் உற்பத்திக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

...தான் இந்த மாவீரர்கள். அந்த மாவீரர்களுக்காக எடுக்கப்பட்டதுதான் இந்த மாவீரர் விழா இந்த மாவீரர்களின் எழுச்சிக் கூட்ட நினைவில் குண்டுமாரி பொழியும் இம் மண்ணில் எமது மக்கள் கொள்கை உறுதி கொண்டவர்களாக துணிச்சலோடு இங்கே கலந்து கொண்டிருக்கின்றனர்.

எங்களுக்கு சுதந்திரத்தின் மீது ஆசை இருப்பது தவறா? எங்கள் பாரம்பரிய தாய்ப் பூமியை பெற்றுக்கொள்ள பாடுபடுகிறோம். சிங்கள ஒடுக்கு முறையில் இருந்து தமிழீழத்தை மீட்டெடுத்து அதில் நாங்கள் வாழத்தான் விரும்புகிறோம் எமது போராட்டம் 1972இல் தொடங்கியது

...ட்ட மாவீரர்கள் பணிமனை பொறுப்பாளர் திரு. எழிலன் யாழ் மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தேன்மொழி ஆகியோரும் நினைவுரை வழங்கினர். அதனையடுத்து வடமராட்சி கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

ஆரம்பத்தில் ஈகைச்சுடரை வடமராட்சி தளபதி திரு அருணா அவர்களும், அன்னை பூபதியின் உருவப்படத்திற்கு திரு. அரசண்ணா தீபம் ஏற்றி மாலை அணிவித்தார். மாவீரர்களின் பெற்றோர் தமது பிள்ளைகளான மாவீரர்களின் உருவப் படங்களுக்கு தீபம் ஏற்றி மாலை அணிவித்தனர். (யோ

# 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
11-[illegible]-1965

வீரச்சாவு
30-03-1986


## வீரவேங்கை ராஜன்

(பொன்னுத்துரை நடேசலிங்கம்)
கும்புறுப்பிட்டி, திருகோணமலை

தாய்மண் காக்கப் புறப்பட்டவனே!
தலைவனின் பாதையில் சென்றவனே!
கொண்ட கொள்கையில் மலைபோல் நின்றவனே!
எங்கள் எண்ணத்தில் எந்நாளும் நிலைத்தவனே!
உன்கனவு நனவாகும் வரை-என்றும்
தொடர்கின்றோம் உன்வழியில் மகனே!

சி. எஸ். கே. தோட்டம், குடும்பத்தினர்.
கிளாலி,
எழுதுமட்டுவாள் (7860)

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
04.08.1949

விண்ணில்
30.03.1991

அமரர்

## தம்பித்துரை தனானந்தம்

(தனம்)

(மண்டைதீவு 1-ம் வட்டாரம்)

சிந்தையில் நிறைந்தவர் - எம்மை
அன்பினால் நிறைத்தவர் எந்தையே
ஐயா! உம்மை நிதம் பணிகின்றோம்
நீர் நிழலாக நின்றெம்மைத் தினம்
வழி நடத்திடுவீர்!!

உன் அன்பிற்காய் ஏங்கும்
ஆஸ்பத்திரி வீதி, மனைவி, மக்கள்,
யாழ்ப்பாணம். (சி-8944) உறவினர்.


யாழ். பல்கலைக்கழக கலைப்பீட
மாணவர் ஒன்றியத்தினரின்

# "பொய்க்கால்"

(நாடகம்)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, உள்ளரங்கில்
இன்று
22ஆவது தடவையாக மேடையேறுகிறது
இரவு 6 மணி, 8 மணி இரு காட்சிகள்
பிரவேசம் 10/-
(காட்சிகள் குறித்த நேரத்தில் ஆரம்பமாகும்)

கல்வயல் ச. ச. நி:

விளம்பர அன்பளிப்பு:

- வி. எம். எஸ் பல்பொருள் விற்பனை நிலையம் சாவகச்சேரி
- ஸ்ரீ விக்னேஸ்வரா ஸ்டோர்ஸ், சாவகச்சேரி.

(7878)

# நரசிம்மராவின் பாதுகாப்புப் பற்றி புலிகளுடன் எதுவும் பேசவில்லை

## இந்திய அரசு அதிகாரிகள் மறுப்பு

(சென்னை)

இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் பிரிட்டனில் பயணம் மேற்கொண்டிருந்த போது அவரது பாதுகாப்பு தொடர்பாக இந்திய அரசின் பாதுகாப்புத்துறை அமைப்பொன்று விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக வெளிவந்த செய்திகள் தவறானவை என்று இந்திய அரசு மறுப்பு தெரிவித்துள்ளது.

பிரதமரின் பாதுகாப்புக்கு பிரிட்டனில் எந்த அச்சுறுத்தலும் இருக்கக்கூடாது எனவும், இதற்குப் பதிலாக விடுதலைப் புலிகள் மீதான தடையுத்தரவு இந்தியாவில் நீக்கப்பட முயற்சிக்கும் எனவும் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அரசின் பாதுகாப்பு அமைப்பு ஒன்றிற்கும் இடையே உடன்பாடு காணப்பட்டிருந்ததாக அந்தச் செய்தியில் கூறப்பட்டிருந்தன.

இந்தச் செய்தி முற்றிலும் தவறானது என்று மறுத்த இந்திய அரசுப் பேச்சாளர், பிரதமர் மற்றும் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு ஏற்பாடு பற்றி சரியாகப்புரிந்து கொள்ளாத செய்தியாளரின் கற்பனையே எனவும் தெரிவித்தார்.

வீரப்பன் குழுவை பிடிக்கும் முயற்சியில்

## கிராமவாசிகளை பொலிசார் துன்புறுத்துவது இல்லை

### தமிழக முதல்வர் தெரிவிப்பு

(சென்னை)

சந்தனமரக் கடத்தலில் ஈடுபடும் வீரப்பன் குழுவினரைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பொலிசார் மற்றும் படையினர் பழங்குடியினரையோ, கிராமமக்களையோ துன்புறுத்தவில்லை என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் பேசிய அவர் மேலும் கூறுகையில் சந்தன மரக் கடத்தல்காரர் வீரப்பனைப் பிடிக்கவேண்டும் என்றுதான் காவல்துறையினர் நினைக்கிறார்களே தவிர காட்டுப் பகுதியில் வாழும் பழங்குடியினரையோ, கிராம மக்களையோ துன்புறுத்த நினைக்கவில்லை.

இது விடயத்தில் ஈடுபட்டுள்ள படையினர் பெண்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள் சித்திரவதை செய்கிறார்கள், என்கிற குற்றச்சாட்டுகளைப் பொதுப்படையாக அள்ளி வீசுவது நல்லது அல்ல. குறிப்பிட்ட சம்பவம் எங்கு, எந்த நாளில் நடந்தது என்று சொன்னால் அதை விசாரித்து தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும் சில பேரைக் கர்நாடகச் சிறையில் வைத்திருக்கிறார்களா அல்லது தமிழக சிறையில் வைத்திருக்கிறார்களா என்ற தகவல் கூட தெரியவில்லை என்பது உண்மைக்கு மாறானது.

## தமிழக அரசுமீதான புகார் டில்லிக்கும் அனுப்பப்படும்

### இராமமூர்த்தி தெரிவிப்பு

தமிழக அரசின் மீது புகார் கூறி ஆளுநரிடம் சமர்ப்பிக்கப் பட்ட மனுவின் பிரதிகள் குடியரசுத் தலைவருக்கும், பிரதமருக்கும் கொடுக்கப் படும் என்று வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்தார்.

சென்னையில் தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி செய்தியாளர்களிடம் பேசுகையில் மேலும் கூறியதாவது: தமிழக அரசின் மீதும், அமைச்சர்கள் மீதும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் கூறும் புகார் மனு ஆளுநரிடம் கொடுப்பதற்காக நடத்தப்பட்ட ஊர்வலம் வெற்றிகரமாக அமைந்தது. இம் மனுவின் பிரதிகள் நாம் டெல்லிக்கு செல்லும்போது பிரதமர், மற்றும் குடியரசுத் தலைவர் ஆகியோரிடமும் கொடுக்கப்படும். விழுப்புரத்தில் பிரதமர் நரசிம்மராவ் மற்றும் என்னுடைய கொடும்பாவிகளை எரித்துள்ளனர். இது கண்டனத்திற்குரியது. இதைக் காவல்துறையினர் தடுக்கத் தவறினால் முதல்வரின் உருவப் பொம்மையை தமிழ்நாடு முழுக்க எரிப்போம்.

மேலும் கூறுகையில் பாராளுமன்றத்தில் அ.தி.மு.க வின் ஆதரவு கிடைக்காது விடுவதால் காங்கிரசுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது எனவும் தெரிவித்தார்.

## பர்கூர்தொகுதி கிராமத்தில் வீரப்பன் குழு நடமாட்டம்

(சேலம்)

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் தொகுதியான பர்கூர் பகுதியில் சந்தன மரக் கடத்தல் மன்னன் எனப்படும் வீரப்பனும் அவரது கோஷ்டியினரும் வந்து உணவுப் பொருள்கள், பீடி, புகையிலை மற்றும் கோடரி போன்ற பொருள்களை எடுத்துச் சென்றிருப்பதாக கர்நாடக சிறப்பு அதிரடிப் படைப் பிரிவின் கண்காணிப்பாளர் சஞ்சய் அரோரா கூறியுள்ளார்.

சேலம் பகுதியில் செய்தியாளர் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், கிட்டத்தட்ட 40 ஆண்டுகள் காட்டிலேயே வசித்துவரும் வீரப்பனுக்கு காட்டிலுள்ள அனைத்து மறைவிடங்களும் அத்துப்படி. வீரப்பன் கும்பலை வளைத்து விடுவோம். ஆனால் சிறிது நாளாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

## பாராளு.உறுப்பினர் வீடுகள் பொலிசாரால் சோதனை

### ஜனதா தள் உறுப்பினர் புகார்

ஜனதா தள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் தமது வீடுகளில் டில்லிப் பொலிசார் சோதனை நடத்துவதாக பாராளுமன்றத்தில் குற்றம்சாட்டியுள்ளனர். ஜனதாதள் உறுப்பினரான நிதேஷ் குமார் நேற்று பாராளுமன்றம் கூடிய உடனேயே இந்தப் பிரச்சினையைக் கிளப்பினார்.

காட் எனப்படும் பொது வர்த்தக விநியோக உடன்படிக்கை தொடர்பாக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக வருவோரை பொலிசார் பிடித்துச் சென்று விடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

காட் உடன்பாட்டிற்கு அமைதியான முறையில் எதிர்ப்பு தெரிவிக்கவே தமது கட்சி விரும்புவதாகவும், எனினும் அரசாங்கம் இப் பிரச்சினையை ஒரு எதிர்ப்பு நடவடிக்கையாகவே கருதுகின்றது எனவும் சரத்யாதவ் தெரிவித்தார்.

## இடைத்தேர்தல்களில்பா.ம.க தனித்தே போட்டியிடும்

- ராமதாஸ் அறிவிப்பு

## அரசியலில் ஈடுபாடு அதிகரித்துள்ளது

(டில்லி)

மக்களுக்கான தேர்தல் சீர்திருத்தத்தை மேற்கொள்ள அரசியல்வாதிகள் முன்வர மாட்டார்கள். அதிகாரிகள் பேசவே மாட்டார்கள். பொது மக்களுக்கோ பிரச்சினைகளுடன் மல்லாடுவதற்கே, நேரம் சரியாக இருப்பதால் தேர்தல் சீர்திருத்தம் பற்றி யோசிக்கவே நேரம் இல்லை' இவ்வாறு இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையாளர் டி.என். சேஷன் தெரிவித்தார்.

புதுடில்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய அவர் மேலும் கூறுகையில் இந்தியாவில் ஜனநாயகம் தோல்வியடைந்தால் அது முழு உலகிற்கும் பொருந்தும். ஆசை காட்டுவதாலும், அலைக்கழிப்பதாலும், சிவில் பணியாளர்களின் முதுகெலும்பு முறிந்துவிட்டது. தேர்தல்களில் பணபலமும், அரசியலில் குற்றவாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துவிட்டது- உத்தரப் பிரதேச மாநிலத்தில் மட்டும் 180 சட்டப்பேரவை உறுப்பினர்கள் குற்றவாளிகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்-

தேர்தல் செலவு எனக்காட்டப்படும் கணக்கு மிகவும் பெரிய நகைச்சுவையான விடயமாகும்- மக்களவைக்குப் போட்டியிட்ட சில வேட்பாளர் ரூ 8 கோடி வரை செலவிட்டுள்ளனர் நூற்றுக்கணக்கான வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரத்திற்காக ஒரு கூட்டம் கூட நடத்திய இல்லை எனவும் தெரிவித்தார்

## எனக்கான உணவுகளை நானே தயாரிக்கிறேன்

-நெல்சன் மண்டேலா

(கேப்டவுன்)

ஒவ்வொரு நாளிலும் எனக்கு தேவையான உணவு வகைகளை நானே தயாரிக்கிறேன். என் படுக்கையை நானே ஒழுங்குபடுத்துகிறேன் நிலத்தைத் துப்புரவு செய்கிறேன். இவற்றைச் செய்வதற்கு பெண்கள் எவரையும் நான் அனுமதிப்பது இல்லை என்று 75 வயதான ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களாக தனது மனைவி வின்னியைப் பிரிந்து ஜொகானஸ் பார்க்கில் தனி வாழ்க்கையை மேற்கொண்டிருக்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பேசும்போது அங்கிருந்த பெண் பார்வையாளர்களிடம் நீங்களும் ஏன் இது போல இருக்கக்கூடாது எனக் கேட்டார்.

இருபத்தேழு வருடங்கள் சிறையில் வாடிய மண்டேலா அங்கிருந்தபோது இவற்றையெல்லாம் கற்றுக் கொண்டதாகவும் சிறையில் இருந்த போது செய்ததைப்போல இன்னமும் மண்டேலா தினமும் அதிகாலை நாலரை மணிக்கு எழுந்து பயிற்சியையும் வேலையையும் ஆரம்பித்து விடுவதாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

தென் ஆபிரிக்காவின் முதலாவது கறுப்பின அதிபராக நெல்சன் மண்டேலா தெரிவு செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுவது தெரிந்ததே

## விற்பனைசந்தைதிறந்துவிட ஜப்பான்முடிவு செய்துள்ளது

அமெரிக்காவுடனான தனது வர்த்தக உபரியை குறைத்துக் கொள்ளும் நோக்கில் விற்பனைச் சந்தையை துவக்கிடும் நடவடிக்கைகளில் ஜப்பான் ஈடுபட்டுள்ளது

வெளிநாட்டுக் கம்பனிகள் ஜப்பானிய விற்பனைச்சந்தைகளில் எளிதாக நுழைவதற்கு இது வாய்ப்பு அளிக்கும் எனக் கருதப்படுகிறது.

ஜப்பானில் வெளிநாட்டுப் பண்டங்களின் தேவையை அதிகரிக்கும் நோக்கிலமைந்த நீண்டகால வரிவெட்டுக்களை அறிமுகப்படுத்துவது என்றும் டோக்கியோ முடிவு செய்துள்ளது

இந்தப் பொருளாதார சீர்திருத்தங்கள் பற்றி அமெரிக்க அதிபர் பில் கிளிண்டனுடன் சீனப் பிரதமர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசினார்

அமெரிக்கப் பண்டங்களுக்கு தனது விற்பனைச் சந்தையை திறந்துவிட டோக்கியோ மறுப்பு தெரிவித்ததைத் தொடர்ந்து அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் நிலவியது தெரிந்ததே

## கருச்சிதைவை தடுக்க பாப்பரசர் கடிதம்

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்காக கருச்சிதைவை அனுமதிக்கக் கூடாது என்று ஐ.நா சபைக்கு பாப்பாண்டவர் கடிதம் எழுதியுள்ளார்

ஐக்கிய நாடுகள் சபை சார்பில் 'மக்கள் தொகையும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் சர்வதேச அளவிலான மாநாடு நடைபெற உள்ளது வருகிற செப்டம்பர் மாதம் கெய்ரோவில் இந்த மாநாடு நடைபெறும். இதற்காக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளது.

ஐ. நா. பொதுச் செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் பாப்பாண்டவர் 2ஆம் ஜோன்போல் கூறியிருப்பதாவது.

கடந்த 1984ஆம் ஆண்டு மெக்சிக்கோவில் நடந்த மக்கள் தொகை பற்றிய மாநாட்டில் எந்த நிலையிலும் கருச்சிதைவை ஊக்குவிக்கக் கூடாது என்று உடன்படிக்கை ஏற்பட்டது. தற்போது 1994ஆம் ஆண்டு மாநாட்டிற்காகத் தயாரிக்கப் பட்டுள்ள ஐ.நா அறிக்கை அந்த உடன்படிக்கையைப் புறக்கணித்துவிட்டது. இது எனக்கு ஆழ்ந்த கவலை அளிப்பதாக உள்ளது.

# கொத்தலாவல விடுதலைப்புலிகளுடன்

## திரை நீக்கம்

1991இல் ஆனையிறவு ஆகாய கடல் வெளித் தாக்குதலில் வீரச்சாவடைந்த வீர

(சென்னை)

மைலாப்பூர் மற்றும் பெருந்துறை சட்டப்பேரவைத் தொகுதிகளில் நடைபெறவுள்ள இடைத்தேர்தல்களில் பாட்டாளி மக்கள் கட்சி தனித்துப் போட்டியிடும் என்று அக்கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், பாட்டாளி மக்கள் கட்சி அ.தி.மு.க.வுடனோ அல்லது காங்கிரஸ் கட்சியுடனோ கூட்டுச் சேராது நடைபெறவிருக்கும் இடைத்தேர்தலில் அ.தி.மு.க.வை எதிர்த்து பொது வேட்பாளரை நிறுத்த அனைத்துக் கட்சிகளும் முன்வந்தால் ஆதரவு தருவது பற்றி பரிசீலனை செய்யப்படும். இட ஒதுக்கீட்டை முதல்வர் ஜெயலலிதா சரியாக அமுல்படுத்தவில்லை; ஐம்பது சதவீதத்திற்கு மேல் இட ஒதுக்கீடு கூடாது என்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பைப் பற்றி கர்நாடக ஆந்திரப் பிரதேச அரசுகள் கவலைப்படவே இல்லை பல்வேறு பதவிகள் நியமனத்திலும் இட ஒதுக்கீடு கவனிக்கப்படவே இல்லை இட ஒதுக்கீட்டிற்கு ஜெயலலிதா எதிரானவர். அவருக்கு "சமூக அநீதிக்காவலர்" என்ற பட்டம் வழங்கலாம்.

காவல்நிலைய கற்பழிப்புகளும் ஜெயலலிதா ஆட்சியில் அதிகரித்துள்ளது சம்பந்தப்பட்ட காவலர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படாததே இதற்குக் காரணமாகும் எனவும் தெரிவித்தார்.

# இரகசிய தொடர்பு கொண்டிருந்தாரா?

அமெரிக்க இராணுவ அக்கடமியில் பெண்களுக்கான உள்ளாடை திருடியதான குற்றச்சாட்டின் பேரில் பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட ஜயந்த கொத்தலாவல மீது ஏன் வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை? இது விடயத்தில் யார் எதை மறைக்கின்றனர்? என்று சண்டே ஐலண்ட் இதழில் பத்திரியாளர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

சிறிலங்கா இராணுவத்தில் கப்டன் தரத்தில் இருந்த போது ஜயந்த கொத்தலாவலவிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த தொடர்புகளும் கூட அவர் பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டமைக்கான காரணங்களில் ஒன்றாக இருக்கலாமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். அமைச்சர்களின் சன்பெரேரா மற்றும் விஜேகுமாரணதுங்கா போன்றோர் யாழ்ப்பாண விஜயம் செய்தபோது இராணுவ அதிகாரியான ஜயந்த கொத்தலாவல விடுதலைப் புலிகளுடன் பேசி இணக்கம் கண்டிருந்தார் எனவும், அதன் பின்னர் இராணுவ இரகசியங்களை விடுதலைப் புலிகளுக்கு விற்று வந்தார் எனவும் மேலும் கூறப்படுகின்றது

இவ்வாறு விடுதலைப்புலிகளுக்கு ஜயந்த கொத்தலாவல செய்திகளை பரிமாறியதில் உண்மை இருக்குமாயின் இதனை அம்பலப்படுத்தி இராணுவ நீதிமன்று மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆனால் ஜயந்த கொத்தலாவல ஜனாதிபதியின் நேரடிப் பணிப்பின் கீழ் இடைநிறுத்தப்பட்டிருக்கிறாரேயன்றி இராணுவ விசாரணைமூலமான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படாதது ஏன்? ஆயுதப்படையின் லெப். கேணல் தரத்திலுள்ள ஒரு அதிகாரி மீது இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பது ஆயுதப்படையினர் மத்தியில் வீண் குழப்பத்தையும், சந்தேகத்தையும் ஏற்படுத்துவதாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ள இப்பத்திரியாளர் உடுகம்பொல மீதான குற்றச்சாட்டுகளிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டதையும் குறிப்பிட்டுள்ளார்.

எது எவ்வாறாயினும் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் ஜயந்த கொத்தலாவல விவகாரத்தில் உண்மை நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

...தனில் வீரச்சாவடைந்த வீரவேங்கை அமுதப் பிரியா (அகிலகுமாரி பரமலிங்கம் -புங்குடுதீவு) அவர்களின் திருவுருவப்பட திரைநீக்கம் ஏப்ரல் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை தீவக மக்கள் தங்கியுள்ள யாழ். ஐந்து சந்தி முஸ்லிம் பகுதியில் நடைபெறும். விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் தீவகக் கோட்ட பொறுப்பாளர் செல்வி நாமகள் தலைமையில் நடைபெறும்.

# பாக்.கிற்கு விமான விற்பனை பதற்றம் அதிகரிக்கச் செய்யும்

## - இந்திய உள்துறை அமைச்சர்

(டில்லி)

இஸ்லாமாபாத்தின் அணு ஆயுதத் திறன் பற்றி முழுதாக அறிந்திருந்தும் கூட பாகிஸ்தானுக்கு எப்-16 ரக விமானங்களை அமெரிக்கா விநியோகிக்க முன்வந்திருப்பது தொடர்பாக இந்திய உள்துறை அமைச்சர் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

இந்தியா வந்திருக்கும் அமெரிக்க செனட் உறுப்பினர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், பாகிஸ்தான் தனது அணு ஆயுத வலிமை பற்றி ஒப்புக்கொண்டிருப்பதையும் சுட்டிக்காட்டினார், பிரஸ்லர் திருத்தம், மற்றும் அணுவாயுத வலிமை என்பன பற்றி அறிந்திருந்தும் கூட அமெரிக்கா எப்-16 ரக போர் விமானங்களை விற்பனை செய்ய முன்வந்துள்ளமை ஆழ்ந்த கவலை தருவதாகவும் தெரிவித்தார். அமெரிக்காவின் இச்செயலால் துணைக்கண்டத்தில் மேலும் பதற்றம் அதிகரிக்கும் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை அமெரிக்க செனட்டரான லாறி பிரஸ்லர் வாஷிங்டனில் பேசுகையில், ஒருமுறை விளக்கப்பட்டாலும் கூட அது பாகிஸ்தானின் அணு ஆயுதங்களை அமெரிக்கா அங்கீகரிப்பதாகவும், பாகிஸ்தானையும் அணு ஆயுத வலிமை படைத்த நாடாக ஏற்பதாகவும் அர்த்தம் ஏற்பட்டு விடும் எனவும் தெரிவித்தார்.

அணு ஆயுதங்களைத் தயாரிப்பதால் நீண்டகால நோக்கில், ஆபத்து ஏற்படாது என்ற அர்த்தத்தை இது ஏற்படுத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மக்கள் சேவையாற்றவே வசதியைப் பெறுகிறீர்கள்

## அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுரை

(மட்டக்களப்பு)

பிரச்சினைகள், வன்செயல்கள் மற்றும் நிதிப் பற்றாக்குறை போன்றவற்றைக் காரணம் காட்டி சீரான நிர்வாகத்தை வழங்க முடியவில்லை என்று அதிகாரிகள் சாக்குப் போக்குச் சொல்லும் நிலை இனியும் நீடிக்கக் கூடாது என்று வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் லயனல் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் திணைக்களங்களின் தலைவர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், தனிப்பட்ட முறையில் பிரச்சினைகள் வரும்போது எதிர்கொள்ளும் எந்தத் தடைகளையும் உடைத்தெறிந்து பிரச்சினைகளைத் தீர்க்க முயல்கிறீர்கள். அதே ரீதியில் மக்களுக்கும் உதவ முன்வாருங்கள் அரச கொள்கைகளை அமுல்படுத்தும் நீங்கள் நலன்புரித் திட்டங்கள் உரியவாறு மக்களிடம் சென்றடைகின்றதா என்பதை உறுதிப்படுத்துங்கள். உங்களுக்கு அரசாங்கம் தரும் வசதிகளும் சலுகைகளும் மக்களுக்கு சேவையாற்றவே என்பதை மறந்து விடாதீர்கள்.

# டிசம்பர் 31க்கு முன்பாக ஜனாதிபதி தேர்தல் நடக்க வேண்டும்

## - திருமதி சிறிமாவோ

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலை உரிய காலத்தில் நடத்த அரசாங்கம் தவறுமானால் அதற்கு எதிராக பொதுமக்களின் துணையோடு தெருவில் இறங்கிப் போராடுவேன் என்று எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் ஜனாதிபதியின் பதவிக்காலம் டிசம்பர் 31உடன் முடிவடைகிறது இதற்கு முன்பாக ஜனாதிபதி தேர்தல் நடைபெறவேண்டும், பாராளுமன்றத்தின் மூலம் ஜனாதிபதியை தெரிவு செய்ய வேண்டும் என்ற ஒரு கருத்தைத் தற்போதைய ஜனாதிபதி கொண்டிருக்கிறார். இந்தக் கருத்துடன் நாம் ஒருபோதும் இணங்கப்போவதில்லை. இதற்கு எதிராக ஏற்கனவே குரல் கொடுத்துள்ளோம்.

ஜனாதிபதியை தெரிவுசெய்யும் முறையை மாற்ற வேண்டுமாயின் மூன்றிலிரு பங்கு வாக்குகளால் அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும். அத்தகைய யோசனை பாராளுமன்றத்திற்கு வருமானால் அதனை நாம் எதிர்ப்போம் இந்த யோசனையைத் தெரிவித்துள்ள ஜனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் அல்ல எனவும் தெரிவித்தார்.

# பாதுகாப்பு ஊழியர் ஏற முன் ரயில் புறப்பட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து வாழைச்சேனை காகித ஆலைக்கு வரும் ரயில் வண்டி அண்மையில் ஏறாவூர் ரயில் நிலையத்தில் ஒருமணி நேரத்திற்கும் மேலாக நிறுத்தப்பட்டது.

மட்டக்களப்பு ரயில் நிலையத்திலிருந்து இந்த ரயில் பாதுகாப்பு ஊழியர்கள் ஏறுவதற்கு முன்பாகவே புறப்பட்டுவிட்டதால் ஏறாவூரில் நிறுத்தப்பட்டது. ஏறாவூரில் இருந்து வாடகைக் கார் ஒன்றில் பயணம் செய்த ரயில் சாரதி மட்டக்களப்பிலிருந்து பாதுகாப்பு ஊழியர்களை ஏற்றிக்கொண்டு வரும் வரை ரயில் ஏறாவூரில் காத்திருந்தது.

இவ்வாறு ரயில் எதிர்பாராத விதமாக தாமதமானதால் காகித ஆலை ஊழியர்கள் தமது கடமைக்கு நேரத்திற்கு செல்ல முடியவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது

# நிர்வாகிகள் தெரிவு

(வடமராட்சி)

கரவெட்டி, இலங்கை செஞ்சிலுவைச் சங்க நிர்வாகிகள் தெரிவு சங்க பணிமனையில் நடைபெற்றது. பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு ஜே ஜி.இராசேந்திரம், உபதலைவர் வைத்திய கலாநிதி ஜி. பாலசுப்பிரமணியம், செயலாளர் திரு ச. சற்குணானந்தம், பொருளாளர் திரு. க சிவானந்தன் உட்பட ஐந்து பேர் கொண்ட நிர்வாகிகளும் தெரிவாகினர்.

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

நம் குறைபாடுகளையும் பொருட்படுத்தாது நம்மிடம் அன்பு பாராட்டப்படுகிறது என்ற நம்பிக்கையே மிக உன்னத இன்பம் ஆகும்.

- விக்டர் ஹ்யூகோ.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 30-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

# சுதந்திர கட்சியின் கண்கள் திறக்கின்றதா?

தென்மாகாண சபைத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியைச் சகிக்க முடியாத ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஆயுதப்படையினருடன் குறிப்பாக பொலிசாருடன் சேர்ந்து எதிர்க்கட்சியினருக்கு எதிராக வன்முறையில் ஈடுபடுவதாகப் பலமான குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இது குறித்து பொதுமக்கள் முன்னணியின் செயலாளர் ஜயரட்ன ''தென்மாகாணசபைத் தேர்தல் முடிவுகளை ஜீரணிக்க முடியாதவர்கள் குண்டர்களினதும், சில பொலிஸ் அதிகாரிகளினதும் ஒத்துழைப்புடன் தமது ஆதரவாளர்களைத் தாக்குவதாகவும், கொலை மிரட்டல்களை மேற்கொண்டு வருவதாகவும்'' தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து சுதந்திரக்கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேலும் ஒருபடி சென்று 'சட்டத்தையும் ஒழுங்கையும் பேண வேண்டியவர்கள் பக்கசார்பாக நடந்து வருவது குறித்து மக்கள் கோபம் அடைந்துள்ளதுடன் அதற்கெதிராகக் கிளர்ந்தெழும் சூழ்நிலை தோன்றிவருவதை அவதானிக்க முடிகின்றது' என பொலிஸ்மா அதிபருக்கு எழுதிய கடிதத்தில் குற்றம் சாட்டியுள்ளதோடு எச்சரிக்கையும் செய்துள்ளார்.

இதேசமயம் எதிரணியினரின் இக்குற்றச்சாட்டுக்களை நிருபிப்பதற்கு ஆதாரங்கள் தேடத் தேவையும் இல்லை. ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பது போல் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஒரு சில உதாரணங்களே போதுமானவையாகும். தென்மாகாண சபைத் தேர்தல் வெற்றியை எதிரணி கொண்டாடுவதைத் தடுக்கும் முகமாக ஊரடங்குச் சட்டம் பிறப்பித்ததில் இருந்தே இதனைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்நிலையில் எதிரணியினரின் குற்றச்சாட்டில் நியாயம் இல்லாமல் இல்லை, என்பதோடு, எச்சரிக்கையின் அர்த்தமும் இல்லாமலும் இல்லை ...

# போசாக்கின்மை தெரிவதற்கு முன்னர் விளைவுகள் பெரிதாகி விடுகின்றது

உலகின் போசாக்கற்ற அவசர நிலைமை தொலைக் காட்சித்திரைகளில் காண்பிக்கப்படுவதில்லை பொதுமக்கள் அதனையிட்டுக் கிளர்ந்தெழுவதும் இல்லை. எனினும் சாதாரண அன்றாட போசாக்கின்மை அதன் வீச்சிலும் குரூரத்திலும் திகைப்பூட்டுவதாய் உள்ளது வறுமையின் தோன்றாத்துணையான போசாக்கின்மை வளர்முக உலகில் மூன்றில் ஒருவர் வீதமான சிறுவர்களின் உள, உடல் வளர்ச்சியை குன்றச் செய்கிறது.

உலகச் சிறுவர்களில் 1 அல்லது 2 சதவீதமானோரிலேயே போசாக்கின்மை கண்ணுக்குப் புலனாகிறது. ஆனால் 5 வயதுக்குட்பட்ட 19கோடி சிறுவர்கள் மிகக்கடுமையான போசாக்கின்மைக்கு ஆளாகி சுகவீனம், விருத்தியின்மை ஆகியவற்றில் அமுங்கி விடுகிறார்கள்.

இந்தப் பிரச்சினை உலகின் போசாக்கற்ற சிறுவர்களில் அரைப்பங்கினரின் உறைவிடமாக தென் ஆசியாவில் மிகப் பரவலாகக் காணப்படுகிறது

போசாக்கற்றோரின் வாழ்க்கைச் சூழல் சிக்கல் நிறைந்த தொன்றாகும். வறிய அயல்களில் வாழும் குடும்பங்கள் பல அறுவடைக்கு இடைப்பட்ட காலங்களில் அல்லது வரட்சி, யுத்தம் ஆகியன இடம்பெறும் காலங்களில் உணவு இல்லாமல் அவதியுறுவது வழக்கம். ஆயினும் பெரும்பாலான போசாக்கற்ற சிறுவர்கள் போதுமானளவு ஆகார வசதியுள்ள வீடுகளிலேயே வாழுகிறார்கள் குடும்பத்தின் மொத்த ஆகாரத் தேவையில் ஒரு சொற்ப அளவே ஒரு குழந்தைக்கு ஊட்டத் தேவைப்படுகிறது.

பிறப்பில் எடை குறைந்திருத்தல் போன்ற விசேட பிரச்சினைகளும் புட்டிப் பாலூட்டுதல் போன்ற குறிப்பான நடைமுறைகளுமே போசாக்கின்மைக்கு ஏதுவாகின்றன. ஆயினும் முக்கியமான காரணம் சுத்தமான நீரும் வடிகால் வசதிகளுமில்லாத வறிய சமுதாயங்களில் தோன்றும் நோய்கள் குறிப்பாக வயிற்றோட்டம் ஆகும். அடிக்கடி நோய் உண்டாகும் போது உடம்பிலும் அதன்கலன்களிலுமுள்ள சத்துக்களெல்லாம் வெளியேறி விடுகின்றன

சத்துக்கள் வற்றிவிட்டால் மனித உடம்பு இயங்குவதற்கு சில தற்காப்பு முறைகளை நாடுகிறது. இவை பெரும்பாலும் கண்ணுக்குப் புலனாவதில்லை. வளர்ச்சிக்குறையை மதிப்பிடுவதற்கான அட்டவணையைப் பயன்படுத்தும் போது மட்டுமே புலனாகும். வெளியே காணப்படும் அறிகுறி சோம்பேறிப் போக்காகும் சக்தியை சேர்த்து வைக்க உடம்பு சிரமப்படும் போது இந்தக்குணம் தோன்றும் போசாக்கற்ற சிறுவர்கள் ஓடி விளையாடுவதற்குப் பதிலாக ஒரேயிடத்தில் நிற்பார்கள் நிற்பதற்குப் பதிலாக உட்கார்ந்திருப்பர், உட்காருவதற்குப் பதிலாக படுத்திருப்பார்

ஊட்டச்சத்துக்கள் குறைந்தமையை ஈடுசெய்யும் பொருட்டு உடம்பின் செயற்பாடுகள் ஒடுங்குகின்றன இரத்த அழுத்த வேகம் இறங்குகிறது. தேகத்தின் கொழுப்பு குறைவானால் திரண்டிருக்கும் களஞ்சியத்திலிருந்து இரவல் வாங்குகிறது. கொழுப்புக்குப் பதிலாக தசைகளின் முறுக்குத் தளர்ச்சியடைகின்றன. எலும்பின் வளர்ச்சி ஊனமடைகிறது.

போசாக்கின்மை வெளிப்படையாகத் தோன்றும் முன்னரே நோயின் மோசமான விளைவுகள் பெரிதாகிவிடுகின்றன. ஓரளவு போசாக்கற்ற சிறுவர்களுக்கு நோய் கண்டால் அவர்கள் அதனால் மரணிக்கும் சாத்தியக்கூறு இருமடங்காகும்; சுமாராக உள்ள சிறுவர்களுக்கு மும்மடங்காகும் ஆண்டு தோறும் இறக்கும் 1 கோடியே 30 இலட்சம் சிறுவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் விடயத்தில் இது ஓர் முக்கிய அம்சமாகும். மறுபுறத்தில் நிறைவான போசாக்கு நோயை எதிர்க்கும் வலுமிக்க கவசமாகும்

போசாக்கின்மை, பல்வேறு காரணங்களினால் கர்ப்ப காலத்தின் கடைசி மூன்று மாதப் பருவத்திலும் பிரசவத்தின் பின்னர் முதல் 12 மாதத்திலுமே மிக மோசமாகத் தாக்குகிறது. இந்த அபாயப் பருவத்தில் குழந்தையின் சிறிய வயிற்றுக்கு அடிக்கடி ஆகாரம் தேவைப்படும். மூளை வளர்ச்சி இப் பருவத்தில் பூர்த்தி பெறுகிறது. நோயைத் தாங்கும் சக்தி அப்பொழுது தான் துளிர்க்கிறது

வளர்ச்சிக் குறைபாட்டின் கடுமையான பாதிப்புகள் குழந்தை ஒரு வயதை எட்டு முன்னர் நிலை கொண்டு விடுகின்றன. போசாக்கு பிற்பாடு செம்மையுற்றாலும் கூட குழந்தையின் மன வளர்ச்சியும் தேக வளர்ச்சியும் ஊனமடையவே செய்யும். இதனால் சிறுவர்களினதும் வருங்காலம் பிரகாசம் குன்றியதாகலாம்.

போசாக்கு குறைந்த தாய்மார் எடை குறைந்த குழந்தைகளைப் பெறுவர். கருவிலேயே போசாக்கற்று வளரும் சிசு வாழ்க்கையின் ஆரம்ப ஆண்டுகளிலும் அவ்வாறே இருக்கும்.

2000 ஆம் ஆண்டளவில் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களிடையே காணப்படும் கடுமையான மற்றும் சுமாரான போசாக்கின்மையின் விகிதாசாரத்தைச் சரிபாதியாகக் குறைக்கும் இலக்கினை அடைவோமென்று அரசியல் தலைவர்கள் 1990 இல் நடைபெற்ற சிறுவர்க்கான உலக உச்சி மாநாட்டில் உடன்பட்டார்கள். இது சாத்தியமே என்பதை ஆபிரிக்கா, இந்தியா ஆகிய இரு நாடுகளிலும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட செயல் திட்டங்கள் புலப்படுத்துகின்றன.

தன்சானியா நாட்டில் பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் சமுதாய அடிப்படையில் அமைந்த இரிங்கா போசாக்குச் செயல் திட்டம் மூன்று வருடத்துக்குள் போசாக்கின்மையின் விகிதாசாரத்தை அரைவாசியாகக் குறைக்க உதவியுள்ளது 84 இல் இத்திட்டத்தை ஆரம்பிக்க ஏற்பட்ட செலவு, ஒரு குழந்தைக்கு சுமார் 16 டொலர் வீதமுமே. இயக்கம் நாடளாவியதாக விரிவடைந்ததனால் இச் செலவு சுமார் 2 50 டொலர் அளவாகக் குறைந்துள்ளது.

உலக சிறுவர் நிலை

# பாக். இற்கு எப்-16 விமானம் இந்தியா ஆட்சேபம்

(டில்லி)

பாகிஸ்தானுக்கு எப் - 16 போர் விமானங்களை விற்பனை செய்வதற்கான அமெரிக்காவின் உத்தேசத்திற்கு இந்தியா ஆட்சேபம் தெரிவித்திருப்பதுடன் இந்த போர் விமான விற்பனை பிராந்தியத்தில் மேலும் பதற்றத்தை அதிகரிக்கும் என்றும் கூறியுள்ளது.

38 எப்-16 போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு விற்பனை செய்வதற்கான அமெரிக்காவின் யோசனை தெற்காசியாவின் பாதுகாப்பை சீர்குலைத்து விடும் என இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டி ... லையா என்பதைப் பெறுத்தே பாகிஸ்தானுக்கான அமெரிக்க போர் விமான விற்பனை அமையும் என ராபெல் முன்னதாக இந்தியதொலைக்காட்சிக்குத் தெரிவித்தார்.

# குண்டு துளைக்காத ஆடை அணிவதில்லையாம்

ஜெயலலிதா

(சென்னை)

குண்டு துளைக்காத ஆடையை எப்போதும் நான் அணிவதில்லை என்று சட்டசபையில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கூறினார்

புரட்சித்தலைவி முதலமைச்சர் ஆனதும் தனது உயிரை ... எஸ் பி. சண்முகம் பேசினார்

அதற்குப் பதிலளித்த முதலமைச்சர் ஜெயலலிதா, குண்டு துளைக்காத ஆடையை நான் எப்போதும் அணிவதில்லை என்றார்.

எஸ். பி சண்முகம் தொடர்ந்து பேசிய போது, ...

# அமெரிக்கத் துருப்புகள் வெளியேறுகின்றன

(மொகடிசு)

சோமாலியாவிலிருந்து அமெரிக்கப்படைகள் கடந்த வெள்ளியன்று முற்றாகவெளியேறின. இத்துடன் சோமாலியாவில் அமெரிக்காவின் 15 மாதகால இராணுவத் தலையீடு வெற்றிகள் ஏதுமின்றி முடிவுக்கு வருகிறது அமெரிக்கப்படைகள் சோமாலியாவில் பெற்ற அனுபவம் உள்நாட்டுப் போர்களினால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய உலகில் அமைதியைஏற்படுத்துவதை நோக்கிய பணிகளில் எதிர்காலத்தில் ஒரு பாடமாக அமையும் எனக் கூறப்படுகிறது.

சோமாலியாவில் பட்டினியால் வாடும் மக்களை காக்க ... வென 28ஆயிரம் அமெரிக்கத் துருப்புகள் 15 மாதங்களுக்கு முன்னர் வந்திறங்கின என்பது தெரிந்ததே. ஒரு அசாத்தியமான பணியே தமக்கு ஒப்படைக்கப்பட்டதாக அமெரிக்க இராணுவ அதிகாரிகள் பலரும்கூறுகின்றனர். பட்டினியால் மடிந்து கொண்டிருப்போருக்கு உதவிக்கொண்டே அதே வேளை சோமாலிய தீவிரவாதிகளையும் நிராயுதபாணிகளாக்க வேண்டியிருந்தது ஒரு கையில்துப்பாக்கியும் மறுகையில் கரண்டியும் வைத்துக் கொண்டே அமெரிக்கப் படையினர் சோமாலியாவில் செயற்பட வேண்டியிருந்ததாக இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

இதேசமயம் எதிரணியினரின் இக்குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கு ஆதாரங்கள் தேடத் தேவையும் இல்லை. ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பது போல் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஒரு சில உதாரணங்களே போதுமானவையாகும். தென் மாகாண சபைத் தேர்தல் வெற்றியை எதிரணி கொண்டாடுவதைத் தடுக்கும் முகமாக ஊரடங்குச் சட்டம் பிறப்பித்ததில் இருந்தே இதனைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்நிலையில் எதிரணியினரின் குற்றச்சாட்டில் நியாயம் இல்லாமல் இல்லை, என்பதோடு, எச்சரிக்கையில் அர்த்தம் இல்லாமலும் இல்லை. ஏனெனில் உலகத்தில் எங்கும் எப்பகுதியிலும் உள்ள மக்கள் தமது உரிமைகள் மறுக்கப்படும் போதும் தாம் ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் போதும் கிளர்ந்தெழுந்தே ஆவார்கள். அவர்கள் எந்தப் பலவீனமான நிலையில் இருப்பினும், அது நடைபெறுவதே வரலாறாக இருந்துள்ளது.

ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு அடக்கப்படும் மக்கள் கிளர்ந்தெழுவார்கள் என்று இன்றுதான் புரிந்துள்ளது கவலை தரும் விடயமாகும். இலங்கையில் ஒரு இனம் 45 வருடங்களுக்கு மேலாக தனது உரிமைக்காகப் போராடுகிறது இதில் இரு தசாப்தங்களாக சாத்வீகப் போராட்டத்தையும், இரு தசாப்தங்களாக ஆயுதப் போராட்டத்தையும் நடத்திய வருகின்றது ஆனால் சுதந்திரக்கட்சிக்கு ஒரு தேர்தல் வெற்றி தேவையாக இருந்தது! மக்கள் அடக்கப்பட்டால் கிளர்ந்தெழுவார்கள் எனப் புரிந்து கொள்வதற்கு.

இதேபோன்று தான் பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற ஒடுக்குமுறை சட்டங்களை ஐ. தே. க. அரசாங்கம் கொண்டு வந்தபோது சிங்கள எதிர்க்கட்சிகளால் அதனால் விளையப்போகும் பாதிப்பு குறித்து அறிய முடியவில்லை; அதேவேளை புரிந்து கொண்டதையும் வெளிக்காட்டிக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை. இந்நிலையில் தென்னிலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட போதுதான் சட்டத்தின் விபரீதம் உணரப்பட்டது. இச்சட்டத்தை வைத்து அரசாங்கமும், இராணுவமும் ஆடிய வெறியாட்டம் அவர்களை அச்சுறுத்தியது. ஆயினும் தடைச்சட்டத்தின் கொடூரம் வீதிகளில் ரயர்களுடன் வெளிப்பட்ட போதும் எ ர்க்கட்சிகள் சுயலாபம் கருதி வாய்திறக்கவில்லை.

ஆனால் இன்று ஆட்சி அதிகாரத்தை கைவக்க முற்படுகையில் தான் அரச பயங்கரவாதம் என்பது அவர்கள் கண்ணுக்கு படுவது போல் தெரிகின்றது; மக்களின் சுதந்திரம், பாதுகாப்பு பற்றிப் பேசுகின்றனர். இவர்களின் பேச்சுக்களின் நம்பிக்கை தன்மை சந்தேகத்திற்குரியது இதற்கு கடந்த கால வரலாறுகள் சான்றாக இருக்கின்றன. ஆனால் தவறுகளில் இருந்து எவரும் விடுபட முடியாது என்பதல்ல. இதனை சுதந்திரக்கட்சி மனதிற் கொள்ளாமல், ஆட்சிக் கட்டிலில் அமருவதற்கான அரசியல் வழியாகவே கொள்ளுமானால், சிலவேளை ஆட்சிக்கட்டில் ஏறியபின் இன்றைய அரசாங்கத்திற்கு வழங்க வேண்டிய தண்டனையையும் சேர்த்து இவர்களுக்கு மக்கள் வழங்கிவிடவும் கூடும்.

---

இந்தியா ஆட்சேபம் தெரிவித்திருப்பதுடன் இந்த போர் விமான விற்பனை பிராந்தியத்தில் மேலும் பதற்றத்தை அதிகரிக்கும் என்றும் கூறியுள்ளது.

38 எப்-16 போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு விற்பனை செய்வதற்கான அமெரிக்காவின் யோசனை தெற்காசியாவின் பாதுகாப்பை சீர்குலைத்து விடும் என இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் ரொபின் ராபொலிடம் இந்திய வெளியுறவுச் செயலாளர் கிறிஸ் சிறிநிவாசன் தெரிவித்தார்.

அணுஆயுத தொழிற்சாலைகளை பாகிஸ்தான் மூடிவிட தயாராக இருக்கின்றதா இல்

---

## அணிவதில்லையாம்

## ஜெயலலிதா

(சென்னை)

குண்டு துளைக்காத ஆடையை எப்போதும் நான் அணிவதில்லை என்று சட்டசபையில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கூறினார்.

புரட்சித்தலைவி முதலமைச்சர் ஆனதும் தனது உயிரையும் பொருட்படுத்தாமல் அந்நியசக்திகளைஒடுக்கினார் தேசிய ஒருமைப்பாட்டைச் காப்பாற்றினார். இதனால் அவர் குண்டு துளைக்காத ஆடையை அணிகிறார் என்று சட்டசபையில் ஐக்கிய பொதுவுடமை கட்சி உறுப்பினர். எஸ் பி. சண்முகம் பேசினார்

அதற்குப் பதிலளித்த முதலமைச்சர் ஜெயலலிதா, குண்டு துளைக்காத ஆடையை நான் எப்போதும் அணிவதில்லை என்றார்.

எஸ். பி சண்முகம் தொடர்ந்து பேசிய போது,

மதுரையில் விடுதலைப் புலிகள் மூன்று பேர் ஊடுருவியுள்ளார்கள் என்று அறிக்கை விடுவது என்றால் வாழைப்பழம் சாப்பிடுவதுமாதிரி அங்குபுலிகள் ஊடுருவியதாக தெரியவில்லைஎன்றும் கூறினார்.

---

முடிவுக்கு வருகிறது அமெரிக் கப்படைகள் சோமாலியாவில் பெற்ற அனுபவம் உள்நாட்டுப் போர்களினால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய உலகில் அமைதியைஏற்படுத்துவதை நோக்கிய பணிகளில் எதிர்காலத்தில் ஒரு பாடமாக அமையும் எனக் கூறப்படுகிறது.

சோமாலியாவில் பட்டினியால் வாடும் மக்களை காக்க

யால் மடிந்து கொண்டிருப்போருக்கு உதவிக்கொண்டே அதே வேளை சோமாலிய தீவிரவாதிகளையும் நிராயுதபாணிகளாக்க வேண்டியிருந்தது ஒரு கையில்துப்பாக்கியும் மறுகையில் கரண்டியும் வைத்துக் கொண்டே அமெரிக்கப் படையினர் சோமாலியவில் செயற்பட வேண்டியிருந்ததாக இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

---

## ஹிப்ரோன் பாதுகாப்பு

## பி.எல்.ஓ-இஸ்ரேல் முறுகல்

(கெய்ரோ)

மேற்கு ஆற்றங்கரையில் ஹிப்ரோன் நகரின் பாதுகாப்பிற்கான ஏற்பாடுகள் குறித்து பலஸ்தீன விடுதலை இயக்கமும் இஸ்ரேலும் இணக்கம் காணத் தவறிவிட்டன.

பாலஸ்தீனர்களின் சுயாட்சி தொடர்பான பேச்சுவார்த்தைகளை இரு தரப்பினரும் மீண்டும் ஆரம்பிக்க அவர்களுக்கிடையே ஹிப்ரோன் பாதுகாப்பு தொடர்பாக உடன்பாடு ஏற்படுவது அவசியமாகும்.

இதில் ஒரு உடன்பாடு ஏற்பட்டால் மேற்கு ஆற்றங்கரையில் ஜெரிக்கோ பகுதியிலும் காசா பள்ளத்தாக்கிலும் பாலஸ்தீன சுயாட்சிக்கு வழிவகுக்க இஸ்ரேலியப்படைகள் வாபஸ் பெறுவது தொடர்பான பரந்துபட்ட விவகாரம் குறித்து இயல்பாகவே பேச்சுக்களின் போது கையாளலாம் என பி. எல். ஓ. தரப்பினர் தெரிவித்தனர்.

---

## வடகொரிய துருப்புகளை உஷார் நிலையில் இருக்க உத்தரவு

(சியோல்)

வடகொரியாவின் அணுத்திட்டம் தொடர்பாக கொரியக் குடாவில் பதற்றம் அதிகரித்து வருவதற்கு மத்தியில் அந்த நாடு அதன் துருப்புகளை உஷார் நிலையில் வைத்திருப்பதுடன் இராணுவப்பயிற்சி மற்றும் ஒத்திகைகளை தீவிரப்படுத்தியுள்ளது.

தனது அணுத்திட்டத்தை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் சர்வதேச முயற்சி காரணமாக போர் ஒன்று மூளும் என வடகொரியா அச்சுறுத்தியதையடுத்து தென்கொரியாவும் அதன் துருப்புகளை உஷார் நிலையில் வைத்துள்ளது.

வடகொரியா அதன் அவசரகால தொலை தொடர்புகளை பரீட்சித்துப் பார்க்கின்றது. இராணுவப்பயிற்சிகளையும் மேற்கொள்கின்றது விமானமார்க்க பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது

இதேவேளை வடகொரியா விடம் இரகசிய அணுகுண்டுத் தயாரிப்புத் திட்டம் இருக்கின்றது என்பதற்கான சான்றுகள் எனக்கூறி பிரிட்டனின் இன்டிபெண்டன் பத்திரிகை பல செய்மதி புகைப்படங்களை வெளியிட்டுள்ளது.

---

## அமெ. படைகள் வெளியேறின

சோமாலியாவிலிருந்து அமெரிக்கப் படைகள் முற்றாக வெளியேறியுள்ளன. இதன்மூலம் சோமாலியாவிலான அமெரிக்காவின் 15 மாத கால தலையீடு முடிவுக்கு வந்துள்ளது.

சோமாலியாவில் பட்டினியால் வாடும் மக்களுக்கு உதவ 28 ஆயிரம் அமெரிக்கத் துருப்புகள் 15 மாதங்களுக்கு முன் சென்றது தெரிந்ததே.

---

## திருத்தம்

உழைப்பால் உயர்ந்த துணைவேந்தர் துரைராசா என்ற தலைப்பில் நேற்று வெளிவந்த கட்டுரையில் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் என்ற உபதலையங்கத்தின் 5வது பந்தியைப்பின் வருமாறு திருத்தி வாசிக்கவும்,

"இமையாணனில் இருந்து பல மைல்கள், பல மணி நேரம் சைக்கிள் ஓடி, பேராசிரியர் துரைராசா, தானங்களில் அதிதானமான வித்தியாதானம் செய்தார் 'தானம்' என்ற பதத்துக்கேற்ப மாணவரிடமிருந்து எந்த வித லாபத்தையும் எதிர் பார்க்காமலே அவர் செயற்பட்டார்.

---

## குடும்பப் பெண்களுக்கு அரசு வேதனம்

## பாப்பரசர் வலியுறுத்து

(வத்திக்கான்)

வீட்டுப்பணிகளைச் செய்வதற்காகவும் பிள்ளைகளைப் பெற்றெடுத்து வளர்ப்பதற்காகவும் அரசுகள் பெண்களுக்கு சம்பளம் வழங்கவேண்டும் என பரிசுத்த பாப்பரசர் வலியுறுத்தியுள்ளார்.

குடும்பங்களுக்கான வத்திகான் கவுன்சிலின் உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றிய பாப்பரசர் குடும்பத் தலைவிகளாக இருந்து தாய்மார் வீட்டின் முக்கிய பணிகளைச் செய்வதற்காக அரசுகள் சம்பளம் வழங்குவது உட்பட அவற்றிலான சகல வகை நிவாரணங்களையும் வழங்க வேண்டும் என்றார்

வத்திக்கானும் ஐ நாவும் 1994ஐ சர்வதேச குடும்ப ஆண்டாக கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது

### அவதானி அந்தஸ்து

முன்னாள் சோவியத் யூனியனின் பல குடியரசுகளை இணைக்கும் சுயாதீன அரசுகளின் பொதுநல அரசின் அமைப்பிற்கு (சி ஐ எஸ்) ஐ. நா.சபையில் அவதானிகள் அந்தஸ்தை வழங்குவதற்கு ஐ நா பொதுச்சபை வாக்கெடுப்பின்றி முடிவெடுத்துள்ளது

ஐரோப்பிய யூனியன், அரபுலீக், ஆபிரிக்க ஒற்றுமை அமைப்பு என்பன இதுபோல் ஐ. நாவில் அவதானிகள் அந்தஸ்தைக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது

---

## பக்கிங்காம் மாளிகையில் பழங்கால ஓவியம் இருட்டு

(லண்டன்)

பக்கிங்காம் அரண்மனையிலிருந்து சுமார் 1,20,000 அமெரிக்க டாலர் பெறுமதிமிக்க ஓவியமொன்று திருடப்பட்டுள்ளது. அரண்மனையின் முன்னாள் ஊழியர் ஒருவரைப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

அண்மைக் காலத்தில் அரச அரண்மனைகளில் உள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கவனக் குறைவாக இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது திருடப்பட்டிருக்கும் ஓவியத்தை அட்றியன் வன் ஓஸ்டெட் என்னும் ஓவியர் பதினேழாம் நூற்றாண்டில் தீட்டியுள்ளார்.

அறுநூறு அறைகளைக் கொண்ட பக்கிங்காம் அரண்மனையில் உள்ள கலைப்பொருட்களை அதிகாரிகள் ஒவ்வொருநாளும் சோதனையிடுவது கஷ்டமான ஒரு காரியம் என அரண்மனை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## நோயாளர் கவனத்திற்கு

நாளை கொழும்பு செல்லவிருக்கும் நோயாளர்களை இரண்டு நாட்களுக்கு தேவையான உணவு தண்ணீருடன் காலை 8.00 மணியளவில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

## ஆறு புலிகள் வீரச்சாவு


கப்டன்
கட்டப்பொம்மன்


லெப்
அருள்மணி


2ம் லெப்.
இளந்திரையன்


2ம் லெப்.
அரிமாஅரசு


2ம் லெப்.


வீரவேங்கை

# மத்தியஅரசு புலிகளுடன் இணைந்து என்னைக் கொல்ல சதி செய்கிறது

## - தமிழக முதல்வர் குற்றச்சாட்டு

(சென்னை)

இந்திய மத்திய அரசு விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து தமக்கு எதிராக சதித்திட்டம் ஒன்றைத் தீட்டுகிறது என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று தமிழக சட்டப் பேரவையில் தெரிவித்தார். அதேவேளை கருத்து வெளியிட்ட அ.தி.மு.க. அமைச்சர் கண்ணப்பன், ஜெயலலிதாவை ஒழித்துக் கட்ட மத்திய அரசு விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து சதி செய்வதாகக் கூறினார்.

இதை எதிர்க் கட்சியான காங்கிரஸ் உறுப்பினர்கள் மறுத்த போதும் ஜெயலலிதா மீண்டும் தனது கருத்தை வலியுறுத்தினார். இதையடுத்து காங்கிரஸ் உறுப்பினர்கள் சட்டப் பேரவையை விட்டு வெளிநடப்புச் செய்தனர்.

கடந்த ஞாயிறு வெளியான ஆங்கில வார இதழ் ஒன்றில் இந்திய உளவுத்துறையான றோவின் தலைவரும் மேலும் ஐந்து அதிகாரிகளும் பிரதமர் நரசிம்மராவின் பிரிட்டிஷ் பயணத்திற்கு முன்னதாக ஜேர்மனி, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்கே விடுதலைப் புலிகளுடன் பேசி பிரதமர் ராவின் உயிருக்கு எதிரான முயற்சி எதையும் செய்யக் கூடாது எனக் கூறி உறுதி கேட்டிருந்ததாகவும் அதற்கு கைமாறாக இந்தியாவில் உள்ள தடை உத்தரவை அகற்ற வேண்டும் என விடுதலைப் புலிகள் கேட்டதாகவும் அச்செய்தி கூறியது.

எனினும் செய்தி வந்த மறுநாளே மத்திய அரசு இது விஷமத்தனமான செய்தி என மறுத்து விட்டது. இது குறித்து கருத்து தெரிவித்த காங்கிரஸ் உறுப்பினர்கள் இச்செய்தியை அ.தி.மு.க.வினரே விடுதலைப் புலிகள் பற்றி அதிகம் அறிந்திராத ஒரு செய்தியாளர் மூலம் கொடுத்து பிரசுரிக்கச் செய்தனர் என குற்றம் சாட்டினர்.

# புலிகள் மீதான தடையை விலக்கிக் கொள்ளக் கூடாது

(டில்லி)

விடுதலைப் புலிகள் மீதான தடையை விலக்கிக் கொள்ள வேண்டாம் என நேற்று இராஜ்ய சபையில் அ.தி.மு.க. உறுப்பினர் பி.ஜி. நாராயணன் வற்புறுத்தினார். அண்மையில் வெளிநாடு ஒன்றில் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளை றோ உளவுத் துறை அதிகாரிகள் சந்தித்ததாக வெளியான செய்திகள் தொடர்பாக அவர் மத்திய அரசிடம் சில விளக்கங்களையும் கோரினார்.

நாட்டின் நலன் கருதி தமிழக அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

### அநுரா

க்கே குற்றம் சாட்டிவருவது தெரிந்ததே.

இதனையடுத்து விரக்தியடைந்த நிலையில் காணப்பட்ட அநுரா பண்டாரநாயக்கா விமானம் மூலம் நேற்று முன்தினம் அமெரிக்காவிற்கு பயணமாகி விட்டதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இவரது இத்திடீர் விஜயம் அரசியல் வட்டாரங்களில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன; பெரும்பாலும் அநுரா பண்டாரநாயக்கா தனது அரசியல் வாழ்விற்கு அமெரிக்காவிலிருந்தே முழுக்குப் போடுவார் என அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

### ரஷ்யா

கொள்வனவு செய்யப்படும் ஆயுதங்களில் யுத்த டாங்கிகள், துப்பாக்கிரவை துளைக்காத கவசம், துப்பாக்கிகள் உட்பட நவீன ஆயுதங்கள் அடங்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆயுத கொள்வனவு தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரியும் மற்றும் விமானப்படை, கடற்படை, இராணுவத்தைச் சேர்ந்த தலா இரு சிரேஷ்ட தளபதிகளும் நியமிக்கப்பட இருப்பதாக தெரிய வருகின்றது.

### ஐ தே க

றது:

இது பற்றி மேலும் தெரியவருவதாவது தற்போது நடைபெற்ற தென் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மூலம் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவரின் வாகனங்களில் இக்குண்டர்கள் பயணம் செய்வதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### சுற்றி வளைக்க

ஓந்தை வவுனியா)

ஃ 2ம் லெப் இளந்திரையன் (திருநாவுக்கரசு சசிகரன் அளவெட்டி தெற்கு தம்பளை யாழ்ப்பாணம்)

ஃ வீரவேங்கை சேரலாதன் (சிவலிங்கம் சிவானந்தன் செம்மலை அளம்பில்)

ஃ லெப். அருள்மணி (சேகர்) (இரத்தினசிங்கம் சந்திரசேகர் பாலைக்கொடிச் சேனை மட்டக்களப்பு)

ஃ 2ம் லெப். சூரன் (செல்லத்துரை தர்சன் 7ஆம் வட்டாரம் மயிலிட்டி யாழ்ப்பாணம்)

ஆகிய ஆறு போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்து கொள்கின்றனர்.

### மூன்று

மூன்று போராளிகளின் வீரச்சாவு நிகழ்வு இன்று நடைபெறும்.

மூன்று போராளிகளினதும் வித்துடல்கள் அவர்களது இல்லங்களிலிருந்து பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் காலை 10 மணிக்கு மாகியப்பிட்டி செம்டி சனசமூக நிலையத்திற்கு எடுத்து செல்லப்படும். அங்கு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதி வீரவணக்கக் கூட்டம் நடைபெறும்; பின் அங்கிருந்து சகல அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம் எடுத்துச் செல்லப்பட்டு இறுதி இராணுவ மரியாதைகளுடன் புனித விதைகுழியில் விதைக்கப்படும்.

### பரீட்சைக்கு

பருத்தித்துறை, கரவெட்டி, வடமராட்சி கிழக்கு ஆகிய கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் போனதையிட்டு தொண்டமானாறு வெளிக்கள நிலைய செயலாளருக்கு பருத்தித்துறை கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரட்ணம் இதுபற்றி கடிதமூலம் அறிவித்துள்ளதோடு தாமதமாகக் கிடைத்த விண்ணப்பத்தாள்களையும் திருப்பி அனுப்பியுள்ளார்.

### ஐ. தே. கவிற்கு

ராக ஒரு சில தினங்களில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கென டி.பி. விஜேதுங்க தற்போது காமினி திஸநாயகாவுக்கு செல்வாக்குள்ளவர்களுடன் விரிவான பேச்சுக்களை நடத்தி வருகின்றார். பெரும்பாலும் அரசிற்கு எதிராக சதித்திட்டம் தீட்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிறிசேன குரே கைது செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ஜனாதிபதி

அண்மையில் சிறிலங்காவிற்கு வந்திருந்த சீன உதவிப் பிரதமர் சிறிலங்கா வெளிநாட்டமைச்சுடன் நடாத்திய பேச்சுக்களில் ஏற்பட்ட முன்னேற்றத்தை அடுத்தே ஜனாதிபதி அங்கு செல்லவுள்ளார்.

ஜனாதிபதி சீனாவில் மே 5 முதல் 9ஆம் திகதி வரை தங்குவார் எனவும், அவர் அப்போது இராணுவத் தளபாட கொள்வனவு சம்பந்தமாகவும் சீன சிறிலங்கா உறவு குறித்தும் பேச்சு நடத்துவார் எனவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை சிறிலங்கா ஜனாதிபதியாக டி. பி. விஜேதுங்கா பதவி ஏற்றபின் மேற்கொள்ளும் முதல்வெளிநாட்டுப் பயணம் இதுவே என்பதும் குறிப்பிடத்தக்கது.

### எயிட்ஸ்

என அவர் கூறியுள்ளார்.

இதுவரை சிறிலங்காவில் 120 பேரிடம் எயிட்ஸ் வைரஸ் தொற்றியிருப்பதாகவும் இவர்களில் 25 பேருக்கு இந்நோய் முழுமையாக


கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்

பதவி வெற்றிடம்

வர்த்தக முகாமையாளர்- 165 l 88 l 106 l 9


## புலமைப் பரிசில் பெற்று அமெரிக்கா சென்றுள்ளார்

## சந்திரசேகரம் உதயகுமார்

(பொறியியலாளர்)

இவர் கெற்பேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் தனது ஆரம்பக்கல்வியை விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்திலும் உயர் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும், சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் பயின்று பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவனாகச் சேர்ந்தார். 22-12-1993 இல் பொறியியல் பட்டம் பெற்று 13-02-1994 இல் புலமைப் பரிசில் பெற்று தனது மேற்படிப்புக்காக அமெரிக்கா சென்றுள்ளார். இவரைக் கெற்பேலி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

2ம் லெப். வீரவேங்கை
சூரன் சேரலாதன்

ஊர்காவற்றுறை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(மட்டுப்படுத்தப்பட்டது)

## அறிவித்தல்

தலைச்சக்கரவண்டி தேவைப்படும் ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கத்தின் முழுமையான பங்கைச் செலுத்திய அங்கத்தவர்கள், 4. 4. 94 திகதிக்கு முன்னர் தங்கள் விண்ணப்பங்களை தலைமைக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும்.

-பொது முகாமையாளர்,
(சி- 8955)

இந்நோய் முழுமையாக தொற்றி விட்ட நிலையில் இதுவரை இவர்களில் 20 பேர் பலியாகிவிட்டதாகவும் ஏனைய ஐந்து பேரும் உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்த இராணுவ வைத்திய அதிகாரி இவ் விடயத்தில் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் எனவும் எச்சரித்துள்ளார்.

**சீனாவிடம்**

விஜேதுங்கா முடிவை அறிவிக்காவிடின் தாம் நாடு திரும்பி தமது பதவியை இராஜினாமா செய்யப்போவதாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சமரசேகரா கூறியுள்ளதாகவும் முன்னதாக செய்திகள் வெளியானது தெரிந்ததே.

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக வருடம் பங்குனித்திங்கள் 18ஆம் நாள் (31-03-1994) வியாழக்கிழமை பகல் 11-40 மணிமுதல் 12-45 மணிவரையுள்ள சுபமுகூர்த்தவேளையில்

| திருவளர் செல்வன் | திருவளர் செல்வி |
|---|---|
| வயித்திலிங்க ஐயர் | தியாகராசாக் குருக்கள் |
| **சிவராசா ஐயர்** | **வரலட்சுமி** |
| அவர்களுக்கு | அவர்களை |

மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய எல்லாம் வல்ல இறைவன் திருவருள் கூடியமையால் அவ்வமயம் தாங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி த. வயித்திலிங்க ஐயர்
இலட்சுமணன் தோட்டம்,
பருத்தித்துறை.

திரு. திருமதி க. சோமசுந்தரம் அதிபர்
(சிறிய தந்தையார்)

திரு. திருமதி தி. சோமாஸ்கந்தராசாக் குருக்கள் B. A.
தெல்லண்டை பத்திரகாளிகோவில்,
பருத்தித்துறை.

(7887)

வர்த்தக முகாமையாளர்- 165 | 88 | 106 | 9

சம்பள அளவுத் திட்டம்:

1405/- - 60X4 - 75X11 - 2470-

இவற்றுடன் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.

தகைமைகள்:

அ) கூட்டுறவுப் பணியாளரின் 10-வது சம்பளத்திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில், அதே துறையில் 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11-வது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டம் அல்லது அதற்குச் சமமான தராதரமும், ஓர் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் சந்தைப்படுத்தல், வழங்கல், பொருள் விநியோகம், பொருள்களின் இறக்குமதி, ஏற்றுமதி போன்ற துறைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் முகாமை மட்டத்திலான பதவியில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவமும்

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் உயர்தர தராதரப் பத்திரம் / கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியும், ஓர் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் சந்தைப்படுத்தல், வழங்கல், பொருள் விநியோகம், பொருள்களின் இறக்குமதி, ஏற்றுமதி போன்ற துறைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டனவற்றின் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவமும்.

வயதெல்லை:

20 - 40 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

சங்கப் பணியாளருக்கு வயதெல்லையில் விலக்களிக்கப்படும்

விண்ணப்பங்கள்யாவும்பதிவுத்தபாலமூலம்12-04-1994 ஆம்திகதிக்குமுன்பதாகக் கிடைக்கக்கூடியதாகஅனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி "தலைவர், கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி"

தலைவர்
கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்,
கரவெட்டி.
(சி-8950)

கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

(7885) -தலைவர்

## மரண அறிவித்தல்

### திரு. கருணானந்தன் திருநீலகண்டன்

(மண்டைதீவு)

84, பழம் வீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்த கருணானந்தன் திருநீலகண்டன் (மண்டைதீவு) அவர்கள் 29- 3- 94 அன்று காலமாகிவிட்டார். இவர் செந்தாமரைச் செல்வியின் அன்புக் கணவரும், ஜெயக்குமார், கரிகரன், பரிதா, சியாமளாவின் அன்புத் தந்தையும் சுப்பிரமணியம், துரைராசா (சுவிஸ்) ஆகியோரின் சகோதரரும், குலசேகரத்தின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்குஇன்றுகாலை11.00 மணிக்கு (30- 3- 94) எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
ஜெயரூபன்

(7882)

வடமாகாண ப. தெ. வ. அ. கூ.
நிறுவனங்களின் சமாசத்தின்

### அனுதாபச் செய்தியும் அறிவித்தலும்

எமது அங்கத்துவ நிறுவனமான மானிப்பாய் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் திரு. ஜே. பி. குணரத்தினம் அவர்களின் தாயார் திருமதி மரியம்மா யோசேப் அவர்களின் மரணத்தையிட்டு அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் நல்லடக்கம் 29-03-94இல் மல்லாகம் சேமக்காலையில் நடைபெற்றது என்பதை சகல பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும், கொத்தணிகளினதும் அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள், அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

499, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.
(சி-8956)

சா. செல்வரட்ணம்
தலைவர்
வடமாகாண ப. தெ. வ. அ.
கூ. ச. சமாசம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.